# ஆனந்த சாகரம்

## அறிமுகம்

தமிழ் நெஞ்சங்களுக்கு இந்த நூற்றாண்டில் கிடைத்த அரிய நூல் "பாண்டியன் பரிசு" எந்தையாரின் இயற்றமிழ்ப் புலமையும், குமுகாய எழுச்சிக் கருத்தாழமும், பழந்தமிழ் இலக்கிய நடையை மிஞ்சும் பாட்டுத்திறமும் ஒரு சேர அமைந்த இந்த இனிய பாவியத்தின் "மூலம்" தான் இனி நீங்கள் படிக்கப் போகிறீர்கள்.

முழுவெள்ளைத் தாளின் நான்கு பக்கங்களில் காரீய எழுது கோலில் படைத்திருக்கிறார் சிறுகதை வடிவில்! தாம் படைக்க எண்ணியதன் கதைச் சுருக்கமாக இதனை எழுதியுள்ளார்.

"பாண்டியன் பரிசு" என்ற சொற்றொடரும், கதைப் போக்கும், கருத்துகளும் பிற்காலத்தில் தோன்றிய பாவியத்தின் "முற்பிறப்பு" என்று கருத வாய்ப்பளிக்கின்றன.

விரோதன், விநோதன், வனஸா என்ற கதை மாந்தர்கள் முற்றும் வடமொழி வடிவங்கள்.

இறுதிக் காட்சியில், "முகிலுக்குள் முழுநிலவு - பின் முகிலை விட்டு வெளிவரும் முழுநிலவு." இந்தக் காட்சி மாற்றத்தால், கதைத் தலைவன் இடுகாட்டில் ஒரு பெண்ணின் பிணத்தைக் கண்டு குறை கூறி அழுவதும், பின்புறம் கதைத் தலைவி வந்ததை நேரிற்கண்டு அகம் மகிழ்வதும் "பாண்டியன் பரிசு" பாவியக்காட்சிகளை நினைவுறுத்தும் நிகழ்ச்சிகள்.

அடுத்து,

### ஆனந்த சாகரம்:

உரைநடையில் இயன்ற குமுகாயச் சித்திரம். மேடைக்கு ஏற்றபடிக் காட்சி அமைப்புகள், குறிப்புகள். இங்கேயும் உச்சக்

காட்சியாக முகிலுக்குள் நிலவு வருகிறது. இந்த நாடகம் முடியாட்சிக் காலமாக இல்லாமல், நம் கால நிகழ்ச்சிகளாக உருமாறியுள்ளது.

"பாண்டியன் பரிசு" பாவியத்திற்கு எந்தையார் எழுதிய முன்னுரை ஈண்டு நோக்கத்தக்கது:

"உரை நடையால் எழுதுவதிலும் கவிதையால் குறைந்த சொற்களால் ஒன்றைச் சொல்லி முடித்துவிடலாம்"

**"பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற**
**சில சொல்லல் தேற்றாதவர்." - என்றார் வள்ளுவர்.**

முதலில் உரைநடையால் இக்கதையை ஆக்கினேன். மிகப் பெருஞ் சுவடியாதல் கூடும் எனத் தோன்றவே, ஏறக்குறைய நானூறு எண்சீர் விருத்தங்களால் எழுதிமுடித்தேன்.

தொடக்கப் படிப்பினரும் புரிந்து கொண்டார்கள். இச்செய்யுளின் பொருளை எனின் அதுதான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது.

எளிய நடை ஒன்றாலேயே தமிழின் மேன்மையைத் - தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

இந்த முன்னுரையின் வாயிலாக முன்பொரு பாண்டியன் பரிசை உரைநடையில் ஆக்கிய செய்தியை அறிய முடிகிறது. அது இந்த "ஆநந்த சாகரம்"தான் என்பது உறுதிப்படவில்லை

பிற்காலப் "பாண்டியன் பரிசு" பாவியம், முடியாட்சிக் கால அமைப்பைக் கொண்டிலங்குவது.

ஒத்துப்போகும் சில பகுதிகள்; வேறு சில மாறுபடும். ஆயினும் ஒப்புநோக்கிப் படிப்பவர்க்கு ஓராயிரம் சுவைகள் விருந்தாகும் என்பது உறுதி.

எந்தையாரின் மாணவரும் பிற்காலத்தில் தமிழாசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றியவருமான வ. பொன்னம்பலம் அவர்கள், இந்த

உரைநடை நாடகத்தைத் தாமே அரங்கேற்ற முயன்றும், வெற்றிபெற வில்லை. பொன்னம்பலம் அவர்கள் எந்தையாரின் மாணவருள் தலைசிறந்தவர்; பகுத்தறிவியக்கக் கொள்கைகளினின்று ஒரு சிறிதும் வழுவாத நெறியாளர்; மேடை நாடகங்கள் பல இவர் இயற்றி அரங்கேற்றிக் கைப்பொருளை இழந்தும், கொள்கைக் காவலராகவே திகழ்ந்தார். புதுவையிலே நடைபெற்ற திராவிடர் கழகத் தொடக்கவிழா மாநாட்டில் எந்தையார் எதிர் அணியினரால் தாக்கப்பட்டபோது, எதிர் நின்று எந்தையாரைக் காத்த உறுதியாளர். மேடை நாடகமாக அரங்கேறத் தம் முயற்சி கை கூடவில்லை என்பதால் என்னிடம் ஒப்படைத்தார் இந்தப் படிகளை! அவரின் அன்புக் கொடையை உங்களிடம் ஒப்படைப்பதில் பெருமை கொள்கிறேன்.

ஆனந்தசாகரம் கையெழுத்துப்படி, மாணவர் பயிற்சிச் சுவடியின் 90 பக்கங்களில், 45 காட்சிகள் தம் கையெழுத்திலேயே எழுதியிருக்கிறார் பாவேந்தர். "கருஞ்சிறுத்தை முகமூடி" என்ற கதை மாந்தன் இவர் எழுதியதாகப் பல இடங்களில் குறிக்கப்பட்ட ஒரு நாடகத்தின் பெயரை நினைவூட்டுகிறான்.

அந்த "கருஞ்சிறுத்தை" எங்குள்ளான்? தெரியவில்லை. சென்னையில் 1963-64-ம் ஆண்டில் மற்றொரு "கருஞ்சிறுத்தை" நாடகத்தை எழுதியதாக ஒரு தகவல். அந்த நாடகம் யார் கையில் உள்ளது? கருஞ்சிறுத்தையைத் தேடிப் புலனாய்வு நடத்தி வருகிறேன்.

முகிலுக்குள் நிலவு மறைந்த நேரத்தில் காதலியிடம் பாண்டியன் பரிசை ஒப்படைக்கும் போது, இந்தக் கையெழுத்துப்படி முற்றுப்பெறாத நிலையில் உள்ளது. இந்த உச்சக்கட்டக் காட்சியைப் பிற்காலப் "பாண்டியன் பரிசு" பாவியத்தின் இறுதிக் காட்சியைப் படித்து ஒப்பு நோக்கினால், இந்த நாடகத்தின் "ஆனந்த சாகரம்" தலைப்பு பொருந்திவிடும்.

முதல் பாண்டியன் பரிசை வினோதன் தேடிக் கண்டுபிடித்தான். இரண்டாவது முறையாகத் "தினகரன்" தேடிக் கண்டுபிடித்தான். மூன்றாம் முறையாக "வேலன்" கண்டு எடுத்தான் பாவியத்தில்!

"ஆனந்த சாகரம்" பாரதிதாசன் என்ற நூலின் பெயர் தொடங்கி நாடக முழுதும் பிறசொற் கலப்பு உள்ளது. ஆயினும், சிற்சில இடங்களில் பாச் சுவை நம்மை மகிழ்விக்கிறது.

இப்போது நமக்குப் "பாண்டியன் பரிசு" மூன்று கிடைத்துள்ளது.

படித்து ஆய்ந்து,

மகிழ உங்களை அழைக்கின்றேன்.

**- மன்னர் மன்னன்**

## முதலில் எழுதப்பட்ட கதைச் சுருக்கம்

சேனாதிபதி தற்காலிகமாக ஆட்சி நடத்துகிறான்.

விரோதனால் விநோதனுக்கு அநேக ஆபத்துக்கள் உண்டா கின்றன. வனஸாவைப் பலாத்காரம் பண்ணிப் பார்த்தும் முடியாமை யால் விரோதன் தன் ஆட்களைக் கொண்டு வனஸாவையும் தோழியையும் பிடித்துப் பத்திரப் படுத்துகிறான். வனஸாவைக் கொன்று சுடுகாட்டில் ஆலமரத் தடியில் புதைத்து விட்டதாகத் தோழியை நம்ப வைக்கிறார்கள். தோழி, விநோதன் வீட்டில் கிழவியிடம் அதே விதம் கூறியிருக்கிறாள்.

விநோதன் தன் தாயாகிய கிழவி தந்த கடிதப்படி, பாண்டியன் பரிசைக் கண்டுபிடித்து விடுகிறான். தன்னை எதிரிகள் சதா வேவு பார்த்து வருகிறார்கள் என்பதற்காக சார மலையின் உச்சியில் இரவில் ஒரு பொம்மையை நிறுத்தி அதன் பக்கத்தில் ஒரு பொய்ப் பெட்டியை வைத்து விடுகிறான்.

அந்தப் பொம்மையை விநோதன் என்று நினைத்து எதிரிகள் மலையைச் சுற்றி நின்று கொண்டிருக்கிறார்கள் இறங்கட்டும் என்று.

விநோதன் பெட்டியை எடுத்துக் கொண்டு தன் தாயிடம் போகிறான். தாயும், தோழியும் வனஸாவின் பிரேதம் சுடுகாட்டில் ஆல மரத்தின் அடியிற் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

விநோதன் சோகத்தால் விழுகிறான். பெட்டியை எடுத்துக் கொண்டு ஆலமரத்தடிக்கு ஓடுகிறான். அங்கிருந்த ஓர் சவக் குழியைத் தோண்டுகிறான்.

அதில் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த ஒரு பிரேதத்தை வனஸாவென்று நினைத்துக் கதறுகிறான். அச்சமயம் நிலா முகிலைக் கிழித்துக்கொண்டு வெளிவருகின்றது. பிரேதத்தின் விநோத தோற்றத்தை விநோதன் பார்த்து, பெண் என்பது ஒரு ஆபாசம் என்றும், இதற்காகத் தானா இத்தனை கஷ்டப்பட்டோம் என்றும் வெறுத்துக் கதறுகிறான்.

அதே சமயம் வனஸா எதிரிகளிடமிருந்து தப்பி, விநோதன் தாயால் சேதியறிந்து மயானத்தில் வந்து விநோதனைக் காணுகிறாள். விநோதன் அவளை ஆநந்தத்தோடு தழுவப் போகிறான். அவள், "இந்நேரம் இவ்வுலகையே வெறுத்தீர்கள்" என்று கேட்கிறாள். விநோதன் "ஆம், வனஸாவை இழந்த உலகம் பயனற்றது" என்று தழுவிக் கொள்ளுகிறான்.

பாண்டியன் பரிசு திறக்கப்படுகிறது. அதில் இருந்த பாண்டியன் - பாண்டியன் தேவி ஆடையுடன் - இருவரும் நகரில் பிரவேசிக்கிறார்கள். நகர ஜனங்கள் எதிர்கொள்ளுகிறார்கள்.

விநோதனுக்கும், மந்திரிகுமாரிக்கும் மணமுடிக்க வேண்டும் என்றும், நாட்டை விநோதன் ஆள வேண்டும் என்றும் உத்தரவிட்டு - சேனையுடன் வனஸாவின் சொந்த நாட்டைப் பிடித்திருக்கும் அரசனுக்குத் தூது போகிறார்கள்.

* * *

**"பாண்டியன் பரிசு" என்ற காப்பியம் எழுதுவதற்கு ஏறத்தாழப் பத்தாண்டுக்கு முன்னதாக எழுதப்பட்ட கதைச் சுருக்கம் இது. புகழ்க் காப்பியமான "பாண்டியன் பரிசு"க்கு வித்தான இக் கதைக் கருவில் கதை மாந்தர்கள், காட்சி அமைப்புகள் அக் காலத்தில் நடைமுறையில் இருந்தவைகளோடு ஒத்துப் போகின்றன. இறுதிக் காட்சியில் நிலவு தோன்று முன்னரும், பின்னரும் வரும் கருத்துகள் "பாண்டியன் பரிசு" பெருங் காப்பியத்துடன் ஒத்திசைந்து காணப்படுகின்றன என்பதைக் கருதிப் பார்க்க!**

**- மன்னர் மன்னன்**

## பாத்திரங்கள்

| | |
|---|---|
| தினகரன் | : கதாநாயகன் |
| கருஞ்சிறுத்தை, 'முகமூடி' | : (புதுச்சேரி) |
| தீனதயாளன் | : கதாநாயகன் தந்தை |
| தெய்வயானை | : கதாநாயகன் தாய் |
| சொக்கலிங்கம் | : கதாநாயகன் காரோட்டி (டிரைவர்) |
| புனிதா | : கதாநாயகி (ஆஸ்திரேலியாவிலிருந்து தீனதயாளன் வீட்டுக்கு வந்தவர்கள்) |
| பூரணலிங்கம் | : கதாநாயகி தந்தை |
| சங்கரன் | : தீனதயாளன் வீட்டுக் காரியக்காரன். கலகக்காரனின் உதவியாள். |
| சாரங்கம் | : கலகக்காரன் |
| ராங்கு | : கொள்ளைக் கூட்டத்தலைவர். மற்றும் சேரி சனங்கள், கோயில் தரும கர்த்தர்கள், கோயில் குருக்கள், கொள்ளைக் கூட்டம், டாக்டர்மு தலியவர்கள். |

மற்றும் சேரி சனங்கள், கோயில் தரும கர்த்தர்கள், கோயில் குருக்கள், கொள்ளைக் கூட்டம், டாக்டர் முதலியவர்கள்.

## காட்சி - 1

## புதுச்சேரி

புனிதா, பூரணலிங்கம், சங்கரன் ஆகிய மூவரும் ஏறியுள்ள கார் ஒன்றும், மற்றும் இருப்புப் பெட்டிச் சாமான் கள் ஏற்றிய கார் ஒன்றும், புதுவை தீனதயாளன் வீடு நோக்கி வருகின்றன.

சங்கரன் : அதோ அந்த மாடி வீடுதான்.

புனிதா : அதுதானா?

(கார்கள் இரண்டும் வீட்டின் எதிரில் நிற்கின்றன)

பூரணலிங்கம்: பத்திரமாக உள்ளே வந்து சேரணுமே இவைகள்!

சங்கரன் : அதற்கென்ன. (ஆளை நோக்கி) பத்திரமாக இறக்கித் தூக்கி வாருங்கள். நீங்க வாங்க.

(அனைவரும் உள்ளே நுழைகிறார்கள். வீட்டில் தீனதயாளன் நோயாளி நாற்காலியில் சாய்ந்திருக்கிறார். அவர் எதிரில், மேசையின்மேல் மருந்து சீசாக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.)

தீனதயாளன் : (பூரணலிங்கம் வருகையை நோக்கி) வரவேண்டும்! உங்களை எதிர்கொண்டழைக்கக் கொடுத்து வைக்க வில்லை. (எழுந்திருக்க முயலுகிறார்)

பூரணலிங்கம்: எழுந்திருக்க வேண்டாம். இருங்கள்! இருங்கள்!! தங்கள் காரியக்காரர் சங்கரன் சொல்வார் உங்கட்கு உடல் நலமில்லை யென்று.

தீனதயாளன் : ஏதோ பித்த மயக்கமாம். டாக்டர் அபிப்ராயப்படுகிறார். உட்காருங்கள்! அம்மா உட்கார்! சுமார் 30 வருடமிருக்கலாம் தங்களை நான் பார்த்து.

சங்கரன் : இரும்புப் பெட்டியை ... ... இடம்?

தீனத : அதோ அந்த அறைதான் இருக்கிறதே! எல்லாச் சாமான்களை யும் அதில் இறக்கிவிடு! - தாம்பூலம் கொண்டு வா! போஜனம் சித்தப்படுத்தச் சொல்! (மனைவியைக் குறித்து) அங்கே என்ன செய்கிறாய்?

தெய்வானை : இதோ வந்துவிட்டேன். (வெற்றிலைத் தட்டுடன் வந்து) வாருங்கள் சௌக்கியம்தானா?

பூரண : இதோ! குழந்தை புனிதா! மனைவிதான் சென்ற வருடம் காலமாகிவிட்ட விஷயம் தெரியுமே உங்களுக்கு!

தெய்வ : ஆமாம், கடிதம் எழுதியிருந்தீர்கள்... புனிதா! தாம்பூலம் போட்டுக் கொள்வதுண்டா?

புனிதா : நீங்கள் உட்காருங்கள்.

(தெய்வயானையும் உட்காருகிறாள்.)

தெய்வ : பாவம் புனிதா, அனாதை ஆயினும் தங்களை அடைந்ததால் அதிர்ஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும்.

பூரண : என்ன செய்வது?

தீனத : போஜனம் சித்தப்படுத்து!

பூரண : அதிக அவசரமில்லை.

தீனத : அப்படியல்ல.

ஆள் : (வந்து) ஸ்நாநம் பண்ணலாம்.

தீனத : குளித்துவிடுங்கள். பேச வேண்டிய விஷயங்களைத் தினந்தோறும் பேசலாம்! முதல் விஷயம் போஜனம்.

பூரண : இருக்கட்டுமே! உங்களை நான் பார்க்க வேண்டும் என்ற ஆவல்கூட இன்னும் தணியவில்லையே! தங்கள் குமாரர் சென்னையில் வசிப்பதாக எழுதி இருந்தீர்களே!

தீனத : பி.ஏ. (B.A.,) பரிட்சையில் தேறிவிட்டான். சென்னையில் தான் இருக்கிறான். அவனைச் சென்னையிலுள்ள வாலிபர் சங்கம் விடமாட்டேன் என்கிறது! சங்கர்!!

சங்கரன் : ஏன்?

தீனத : தினகரனுக்குத் தந்தி கொடு! இங்கு வரும்படி.

தெய்வ : எழுந்திருங்கள்.

தீனத : சாப்பிடலாம் எழுந்திருங்கள்.

(அனைவரும் போஜனத்துக்குப் போகிறார்கள்.)

CENTER FOR BHARATHIDASAN STUDIES
005323
LIBRARY
BHARATHIDASAN UNIVERSITY

## காட்சி - 2

(பூரணலிங்கம், தீனதயாளன் இருவரும் சாய்மான நாற்காலியில் படுத்தபடி பேசுகிறார்கள். அப்போது புனிதா உள்ளிருந்து வெளிவந்து கூறுகிறாள்.)

புனிதா : (தீனதயாளுவை நோக்கி) கார் தெருவில் நிற்கிறது. சென்னைக்கா?

தீனத : ஆமாம், புள்ளையாண்டானை அழைத்து வர.

புனிதா : நானும் சென்னைக்குப் போய் வருகிறேனே.

தீனத : தனியாகவா?

புனிதா : அதனாலென்ன?

தீனத : உலகம் என்ன சொல்லும்?

புனிதா : அறிவுலகம் எதுவும் சொல்லாது. மூடவுலகம் எது வேண்டு மானாலும் சொல்லும்.

தீனத : உன் தகப்பனாரைக் கேட்டாயா உத்தரவு.

புனிதா : ஏனப்பா!

பூரண : போய் வரட்டுமே! (புனிதாவை நோக்கி) போய் வா அம்மா!

தீனத : (விழிக்கிறார்).... அப்படியா? காரோட்டியைக் கூப்பிடு! (ஆள் சென்று காரோட்டியைக் கூப்பிட்டு வருகிறான்.)

தீனத : சொக்கலிங்கம்! புனிதாவை அழைத்துக்கொண்டு சென்னைக்குப் போ! தினகரன் இருப்பிடத்தைக் காட்டு! வரும்போது தினகரனையும் அழைத்து வா! பத்திரம்.

## காட்சி - 3

(தீனதளாயன், பூரணலிங்கம், புனிதா)

தீனத : இனி நீங்கள் ஆஸ்திரேலியாவுக்குப் போக வேண்டிய அவசியமில்லையே!

பூரண : இல்லையில்லை, சிக்கறுத்துக் கொண்டுவந்து விட்டேன். புனிதாவுக்கு மறுமணம் செய்து என் கண்ணால் பார்க்க வேண்டும். நண்பரே. புனிதா ஒரு வயது குழந்தையா யிருக்கையில் லிங்கக் கிழவர் ஆஸ்திரேலியாவுக்குத் தூக்கி வந்தார். எனக்குப் பிள்ளையில்லை. குழந்தையை வாங்கி வளர்த்து வந்தேன். பால்ய வயதிலேயே கலியாணம் பண்ணினேன். அந்தப் பிள்ளையாண்டான் இறந்து விட்டான். பிறகு லிங்கக் கிழவரும் இறந்துவிட்டார். என் மனைவியும் சென்ற வருடம் இறந்தாள். நான் லிங்கக் கிழவருக்கு வாக்குத் தத்தம் செய்தபடி இந்தப் புனிதாவுக்கு மறுமணம் செய்துவிட வேண்டும். அதுமாத்திரமல்ல. புனிதாவின் பூர்வீகச் சொத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். புனிதாவின் தந்தையாரைக் கொலை செய்தவர்கள் இன்னாரென்பதை அறிய வேண்டும்.

தீனத : பூஷனப்பெட்டி என்பதாக எழுதியிருந்தீரே அதென்ன?

பூரண : அதுவா! பாண்டிய அரசன் புனிதாவின் முன்னோருக்குப் பரிசாகக் கொடுத்தது. அந்தப் பொக்கிஷத்தின் பொருட்டுத் தான் புனிதாவின் பெற்றோர் கொலை செய்யப்பட்டார்கள்.

தீனத : இருக்கட்டும்! கூடியமட்டும் முயற்சி செய்வோம்.

## காட்சி - 4

(புனிதா தன் தனியறைக்குள் உடையணிந்து கொள்கிறாள். இடையில் ஒரு முழ நீளமுள்ள அழகிய கத்தியைக் கட்டுகிறாள்.)

தீனத : புனிதா தனியாகச் செல்ல உத்தேசிப்பது சரிதான். ஆயினும் என் பழைய இதயம் ஆச்சரியப்படுகிறது.

பூரண : இந்தியாவில் பெண்கள் விடுதலையை வற்புறுத்தும் பத்திரிகைகள் பல நல்ல வேலை செய்து வருகின்றன. உங்கள் இருதயம் பழமையைவிட்டுத் தாண்டாதது எனக்குக் கூட ஆச்சரியமாகவே இருக்கிறது.

தீனத : வெளியுலகோடு நான் அதிகம் சம்பந்தம் வைத்துக் கொள்ளாதது இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது.

(புனிதா வருகிறாள்)

புனிதா : நான் போய் வருகிறேன்.

தீனத : சரியம்மா!

## காட்சி - 5

(கார் போகிறது)

டிரைவர் சொக்கலிங்கம்: இந்தக் கார் போலவே என் சொந்தத்தில் ஒரு கார் வாங்கியிருக்கிறேன்.

புனிதா : அப்படியா? .... சென்னையில் தினகரர் இருக்கும் இடம் உனக்குத் தெரியுமா?

டி.சொக்: தெரியும். நான் சம்பளத்துக்காகவே வேலை பார்க்கிறதாக நினைக்க வேண்டாம். எனக்கும் இருபதினாயிரம் ரூபாய் சொத்து இருக்கிறது.

புனிதா : தினகரர் இருக்கும் வீடு எந்த வீதியில் இருக்கிறது?

டி.சொக்: கோவிந்தப்ப நாய்க்கன் தெரு. உங்கட்கு வயது என்ன இருக்கும்?

புனிதா : ஏன்? இருபது ஆகிறது.

டி.சொக்: என்னைவிட ஒருவயதுதான் நீங்கள் இளமை.

புனிதா : கார் போகட்டும். பேச்சுப் பராக்கில் தவறிவிடப் போகிறது.

(கார்போகிறது)

## காட்சி - 6

### [பூரணலிங்கம் வீடு]

(பூரணலிங்கம், தீனதயாளன், கோயில் தர்மகர்த்தர் ஆகிய சுந்தரம் சுதரிசனம், கந்தன், காளியப்பன், நந்தன், காவற்காரன் அனைவரும் உட்கார்ந்து பேசுகிறார்கள்.)

சுந்தரம் : நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து பதினாயிரம் ரூபாய் அனுப்பினீர்கள். பெருமாள் கோயிலுக்கும், நமது கோயிலுக்கும் ஏற்பட்ட வழக்கில் 6,000 ரூபாய் செலவழிந்து போயிற்று. நிலத்தகராறு இன்னும். ஐக்கோட்டில் தீர்ப்பாக வில்லை. இதுவரைக்கும் அதில் இரண்டு பக்கமும் அதிகச் செலவு. கும்பாபிஷேகம் குறையாய் நிற்கிறது.

பூரண : (உட்சென்று ஒரு தங்கப் பாளத்தை எடுத்து வந்து) இதன் மதிப்பு இருபதினாயிரம் ரூபாய். பத்திரம். வேலையை ஆரம்பியுங்கள்.

(அனைவரும் போகிறார்கள்)

## காட்சி - 7

(சென்னைக்கு இப்புறமுள்ள சிறுநகர். கடைவீதியை நெருங்குகிறது கார்)

டி.சொக் : சோடா கீடா வேண்டுமா?

புனிதா : எனக்கு வேண்டாம். உனக்கு வேண்டுமானால் சாப்பிடு!

டி.சொக் : எனக்குச் சோடா பிடிக்காது. பால் இருந்தால்!

புனிதா : இதோ என்னிடமிருக்கிறது.

(கூஜாவிலிருந்து ஒரு டம்பளரில் பால் ஊற்றிக் கொடுக்கிறாள். டிரைவர் சொக்கன் வாங்கிக் குடிக்கிறான். அதற்குள் சொக்கனுக்கு நேசனான கண்ணன் வருகிறான்.)

கண்ணன் : என்ன சொக்கலிங்கம், எங்கே?

டி.சொக் : சென்னைக்குப் போகிறேன்.

(என்று சொல்லி இறங்கி அவனுடன் போகிறான்.)

(தனியிடத்தில்)

கண்ணன் : அந்த ஆசாமி யார்? தனியாக!

டி.சொக். : என் எஜமான் வீட்டு விருந்தாளி!

கண்ணன் : சும்மா தொட்டுப் பாரேன்!

டி.சொக் : ஆமாம், நான் ஆரம்பிக்கலாகாது. நீ தொட்டுப் பார். நான் இங்கே இருக்கிறேன்.

(கண்ணன் தனியாகக் காரருகில் வந்து)

கண்ணன் : சென்னைக்கா?

புனிதா : ஆம். அவர் எங்கே?

கண்ணன் : காப்பி சாப்பிடுகிறார்.

(புனிதாவின் பக்கத்தில் உட்காருகிறான். காரின் கதவைத் திறந்து கொண்டு)

வெற்றிலையிருக்கிறதா?

புனிதா : இல்லை.

கண்ணன் : நானும் அதோ அதுவரைக்கும் வருகிறேன்.

புனிதா : அதற்கென்ன.

டி.சொக். : (அங்கு வந்து காரில் ஏறி) காரை விடட்டுமா?

புனிதா : விடு!

டி.சொக் : கண்ணா எங்கே போகிறாய்?

(இதற்குள் கண்ணன் புனிதாவை நெருங்குகிறான். கார் போகிறது. புனிதா சிறிது விலகிப் போகிறாள். கார் போகிறது. பின்னும் அதிகம் சமீபிக்கிறான். புனிதா தன் இடையிலிருந்து கத்தியை எடுத்து அதன் கூர்ப்பக்கத்தில் விரலை வைத்துக் கூர்மையைப் பரிசோதிப்பவள்போல் பாவனை காட்டுகிறாள்.)

புனிதா : ஏன் காரை நிறுத்தவில்லையா? (கண்ணன் நடுங்குகிறான். சொக்கன் திரும்பிப் பார்த்து விழிக்கிறான்) இறங்கலாமா...

ஏன் அவர் ஓடுகிறார்?

டி.சொக் : நீங்கள் கத்தியை எடுக்கவே, பயந்துவிட்டான்.

புனிதா : நீ பயப்படவில்லையே! சரி கவனமாகக் காரை விடு!

(கார் போகிறது)

## காட்சி - 8

(சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெரு. ஒரு வீடு. சென்னை வாலிபர் சங்கக் கட்டிடம்)

(தினகரன் தலைமையில் கோவிந்தன், கேசவன், முத்து, காங்கேயன் முதலிய பத்துப்பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். வேலு பேசுகிறான்.)

வேணு : நண்பர்களே, இந்தியப் பெண்களுக்கு நம் பழைய காலப் பெரியோர் விதித்துள்ள கட்டுப்பாடுகளை நான் ஆதரிக்கிறேன்.

(இச்சமயம் ஓர் ஆள், ஒரு கடிதம் கொண்டு வந்து தினகரிடம் தருகிறான். தினகரன் வாசிக்கிறான்)

தி ரகரன் : அழைத்து வா! (ஆள் போகிறான்)

(ஒரு வாலிபன் கூட்டத்தில் பிரவேசிக்கிறான். தினகரன் அவனுக்கு ஒரு நாற்காலியைக் காட்ட வாலிபன் உட்காருகிறான்)

வேணு : பெண்கட்கு விடுதலை வேண்டும் என்றும், ஆடவர்கள் போலவே பெண்களும் எல்லாத் துறைகளிலும் பிரவேசிக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. எந்தப் பெண் விடுதலை கேட்கிறாள் என்பதுதான் தெரியவில்லை. விடுதலையைப் பெண்கள் வெறுக்கிறார்கள். விதவைகள் மறுமணம் செய்து கொள்ள ஆசைப்படுவதை நான் பார்த்ததேயில்லை. கணவன் இறந்தான் என்ற சேதி வெடிகுண்டு போல் அவர்கள் காதில் விழுந்தவுடன், இருந்த காதல் இறந்து விடுகிறது. காதலால் அவர்கள் வாடுகிறார்கள் என்பது முழுப் பொய்!

(என்று சொல்லி உட்காருகிறான்)

வந்த வாலிபன்: தலைவரே நான் சற்றுப் பேச அனுமதி கொடுக்க வேண்டுகிறேன்.

தினகரன் : நமது புதிய நண்பர் பேச அனுமதிக்கிறேன்

வந்தவன் : நண்பர்களே, பெண்கள் விடுதலை வேண்டும் என்று ஆடவர்களைப் போய்க் கெஞ்சவில்லை. ஏமாந்த பெண்களை இழிவுபடுத்தித் திரிய வேண்டாம் என்றுதான் கேட்டுக் கொள்ளுகிறார்கள். விதவைப் பெண்களுக்கும் காதல் தன் கணவனுடன் போய் விடுகிறதாம். இல்லை காதல் இல்லாத உயிர்ப் பொருள் இந்த உலகில் இல்லை. நான் உதாரணம்.

(தனது ஒட்டு மீசையையும், தலைத் துண்டையும் எடுத்து விட்டுப் புனிதா தன் சொந்த உருவத்துடன் நிற்கிறாள். அனைவரும் கரகோஷம்)

"நான் விதவை. ஆனால் காதல் உண்டு"

(கேளுங்கள் கேளுங்கள் என்ற கூச்சல்)

தினகரன் : நான் இதையே ஆதரிக்கிறேன். இத்துடன் கூட்டம் முடிகிறது.

வேணு : இந்த அம்மையார் யார்?

தினகரன் : என் வீட்டு விருந்து.

(அனைவரும் மரியாதை செலுத்திப் போகிறார்கள்.)

தினகரன் : என்றைக்கு வந்தீர்கள் அப்பா?

புனிதா : இன்று காலை! அப்பா புதுவையில் உங்கள் வீட்டில் தான் இருக்கிறார். புதுவைக்குப் புறப்படலாமே.

தினகரன் : சரி.

(இருவரும் போகிறார்கள்.)

## காட்சி - 9

### [புதுச்சேரி சாரங்கன் வீடு]

(காரியக்காரனாகிய சங்கரனும், சாரங்கமும் சாரங்கம் வீட்டின் குறட்டில் நின்று பேசுகிறார்கள்.)

**சங்கரன்** : தீனதயாளன் வீட்டில் ஆஸ்திரேலியாவிலிருந்து விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். இருப்புப் பெட்டி நிறைய தங்கக் கட்டியும், நோட்டும் கொண்டு வந்திருக் கிறார்கள். சிவன் கோயிலுக்கு 20,000 ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டி தருமம் செய்தார் ஆஸ்திரேலியக்காரர். அவருக்கு ஒரே மகள். விதவை! 20 வயது ஆகிறது. நல்ல அழகு! மறு மணம் செய்து கொள்ள மாப்பிள்ளை தேவையாம்.

**சாரங்கம்**: அப்படியானால் ஒரு கை பார்க்கலாமே! விதவையாக இருந்தால், அவர்களிடம் உள்ள பணமுமா விதவை?

**சங்கரன்** : அதுதான் நானும் சொல்லுகிறேன். ஏதோ நாமிருவரும் ஒன்றுக்குள் ஒன்று. நீ நன்றாயிருந்தால் எனக்கு நல்லது.

(தினகரனும், புனிதாவும் ஏறிவரும் கார் தெரு வழியாக வருகிறது)

**சங்கரன்** : (தலையைக் குனிந்து) அதோ பார்! பார்!! காரில்! அவள்தான் புனிதா! அவளைத் தெரிகிறதா? தீனதயாளன் மகள்!

(கார் நெருங்குகிறது)

**சங்கரன்** : இப்போது தான் வருகிற பயணமோ!

(இதற்குள் சாரங்கம், வீட்டின் உள் ஓடித் தன் அறையில் அவசரமாக உடையணிகிறான். கிராப் சீவுகிறான்)

**தினகரன்**: ஆமாம்.

**சங்கரன்** : வந்து போகலாம். நிறுத்துங்கள்.

**தினகரன்**: (கார் நிற்கிறது) சரி!

சங்கரன் : போகலாம் வாருங்கள் அம்மா. இது என் மைத்துனர் வீடுதான்.

(சாரங்கமும் அறையிலிருந்து வருகிறான்.)

சாரங்கம்: உட்காருங்கள்!

(அனைவரும் உட்காருகிறார்கள்)

சங்கரன் : இவர் எனது மைத்துனர். தாய் மாத்திரம் இருக்கிறார்கள். இன்னும் கலியாணம் ஆகவில்லை. ஆக வேண்டிய நல்லது, கெட்டதுக்கு நான்தான் என்று வைத்துக் கொள்ளுங் களேன்.

தினகரன்: சரிதான்.

சங்கரன் : இந்த வீடு, மடுவில் பேஷான நிலங்கள், இன்னும் புன்செய் அநேகம். சொத்தாளி வீட்டுப் பிள்ளை. பிள்ளை யாண்டான் படித்திருக்கிறார்.

தினகரன்: சரிதானே!

புனிதா : வீடு மிக்க வசதியானது.

சங்கரன் : அந்த வீடு வசதியில்லாவிட்டால் இதில் வந்து விடலாமே!

புனிதா : அதற்கென்ன! நாழிகை ஆகிறது.

சாரங்கம்: இருந்து சாப்பிட்டுப் போகிறதுதானே!

புனிதா : அக்கறையில்லை. இன்னொரு சமயம் பார்த்துக் கொள்வோம்.

சாரங்கம்: காப்பியாவது.

புனிதா : இப்போதுதான் சாப்பிட்டோம்.

சாரங்கம்: (சிரித்துக் கொண்டு) எங்கே?

புனிதா : கையோடு கொண்டு வந்திருந்தோம்.

(இருவரும் எழுந்திருக்கிறார்கள். கூடவே சங்கரன், சாரங்கம் இருவரும் எழுந்திருக்கிறார்கள்.)

புனிதா : சாவகாசமாக வருகிறோம், நமஸ்காரம்!

(கார் போகிறது)

## காட்சி - 10

### [தீனதயாளன் வீடு]

(கார் தீனதயாளன் வீடு சேர்கிறது. வீட்டினுள் தீனதயாளன், பூரண லிங்கம் இருவரும் உட்கார்ந்து இருக்கும் சமயம் புனிதா, தினகரன் இருவரும் போகிறார்கள்.)

பூரண : எப்போது சென்னையை விட்டுப் புறப்பட்டீர்கள். வாருங்கள் தம்பி, உட்காருங்கள்.

தீனத : இவர்தான் புனிதாவின் தந்தையப்பா!

தினகரன்: அப்படியா? நமஸ்காரம். காலையில் புறப்பட்டோம். (அனைவரும் உட்கார்ந்தபின்)

பூரண : களைப்பாக இருப்பீர்கள். முதலில் போஜனத்தை முடித்துக் கொள்ளுங்கள்.

புனிதா : இன்னும் ஒரு மணி நேரம் செல்ல வேண்டும்.

தினகரன்: எனக்கும் அப்படித்தான்.

பூரண : அப்படியானால் ஒரு கதை! அது மிக்க ரசன்ய மானது. அனைவரும் கவனிக்க வேண்டும்.

தினகரன்: மிக்க சந்தோஷம்.
(அனைவரும் பூரணலிங்கத்தின் பக்கம் திரும்பிக் கவனிக்கிறார்கள்.)

பூரண : புதுவைப் பூமிநாதனுடைய முன்னோரில் ஒருவர் பாண்டிய மன்னனிடம் சேனாதிபதியாய் இருந்தார். அதற்குப் பரிசாக விசேஷ நகைகள் அடங்கிய பொக்கிஷம் ஒன்றைத் தந்தான். கடைசியாக அது பூமிநாதனிடம் இருந்தது. பூமி நாதனையும், பூமிநாதன் மனைவியையும் ஒரு நாள் நள்ளிர வில் ஒருவன் கொலை செய்தான். அப்போது, பூமி நாதன் மகளுக்கு ஒரு வயது. பூமிநாதனிடமிருந்து வந்த லிங்கக் கிழவர் அந்தக் குழந்தையைக் காப்பாற்றியதும் தவிர,

கொலை செய்தவனையும் செஞ்சிப் பக்கத்தில் கண்டு பழிக்குப்பழி வாங்கிவிட்டார். பூமிநாதனைக் கொன்றவன் அந்த பொக்கிஷத்தை எங்கேயோ ஒளித்து வைத்தான். அதன் ரகசியம் தெரியவில்லை. கொலைக் குற்றம் செய்த அந்த லிங்கக் கிழவர் பயந்து அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டார். அந்தக் குழந்தைக்கு நான் பாலியத்திலேயே விவாகம் செய்தேன். மாப்பிள்ளை இறந்தார். லிங்கக் கிழவரும் பிறகு இறந்தார். என் மனைவியும் இறந்தாள். அந்தக் குழந்தை தான் இந்தப் புனிதா. அந்த லிங்கக் கிழவர் என்னிடம் சொல்லியவைகளை நான் குறித்து வைத்திருக்கிறேன். புனிதாவுக்கு மறு மணம் செய்யவேண்டும். பெட்டியைக் கண்டுபிடிக்க வேண்டும் அந்தப் பெட்டியில் உள்ளவை நவரத்தின பூஷணங்கள், ஒரு கோடி ரூபாய் மதிப்பு!

தீனத : அந்தப் பூமிநாதன் வீடுமாத்திரம் இன்னதென்று தெரிகிறது. செட்டித் தெருவிலுள்ள சாரங்கம் வீடுதான்.

தினகரன்: புனிதா! நாம் வரும்போது இறங்கினோமே!

புனிதா : சரிதான் என் வீட்டில்தான் நாம் இறங்கினோமோ!

தினகரன்: செட்டித்தெரு வீட்டுக்கு நீங்கள் குடிபோய் விடுவது நல்லது.

பூரண : சரி இரும்புப் பெட்டியை மாத்திரம் இங்கேயே வைத்துப் போனால் போகிறது.

தீனத : அப்பா இது விஷயத்தில் நீ இவர்கட்கு ஒத்தாசையாயிரு! ஊராரின் ஆதரவு கோரியே இதுவரைக்கும் பூரணலிங்கம் அவர்கள் இந்த ஊரில் விசேஷ தர்மங்கள் செய்திருக்கிறார். நேற்றுக்கூட 20,000 ரூபாய் பெறக்கூடிய தங்கக் கட்டியை நம்மூர் சிவன் கோயிலுக்குத் தர்மம் செய்தார்.

தினகரன்: பரிதாபமான சரித்திரம்! போஜனத்துக்குப் போவோம்.

## காட்சி - 11

### [தீனதயாளன் வீடு]

(தீனதயாளன், தினகரன், சங்கரன் பேசசு)

தினகரன்: சாரங்கம் வீடு புனிதாவுக்குப் பிடிக்கிறதா?

சங்கரன் : சவுகரியமாக இருக்கிறது.

தினகரன்: சாரங்கத்திற்கு என்ன ஆஸ்தியிருக்கறது?

சங்கரன் : அந்த வீடு, மடுவெளியில் 20 காணி நன்செய் ரொக்கம், நகைகள், 10,000 ரூபாய் இருக்கும்.

தினகரன்: வீடு மிக்க பழசு!

சங்கரன் : அதைச் சாரங்கத்தின் தகப்பனார் விலைக்கு வாங்கியபின் பழுது பார்க்கவேயில்லை. அவரும் இறந்துவிட்டார்.

தினகரன்: இருப்பது யார்?

சங்கரன் : தாயார். செவிடு. தள்ளாதகாலம். பிள்ளையாண்டானுக்குக் கலியாணம் நடந்தால்தான் குடும்பம்!

(இச்சமயம் சாரங்கமும், புனிதாவும் வருகிறார்கள்.)

சங்கரன் : அவர்களும் வந்துவிட்டார்கள், பேசிக் கொண் டிருங்கள். நான் போய் வருகிறேன்! (போகிறான்.)

தினகரன்: வாருங்கள்! உட்காருங்கள். வீடு சவுகரியமாகவே இருப்ப தாக கேள்விப்பட்டேன்.

ஏன் பழுது பார்க்காமல் வைத்திருக்கிறீகள்?

சாரங்கம்: என் தகப்பனார் அதை விலைக்கு வாங்கினார். இறந்து விட்டார். பழுதுபார்க்க சிரத்தையில்லை.

தினகரன்: குடும்ப ஆதரவு உங்கட்கும் கம்மி! கல்யாணம் நடந்தால் தான் குடும்பம்! சீக்கிரம் முடிந்து விடுமல்லவா?

சாரங்கம்: யாருக்குத் தெரியும்?

தினகரன்: ஏன் புனிதாவுக்குத் தெரியுமே!

புனிதா : துவக்கி விட்டீர்களா கிண்டல்!

சாரங்கம்: உங்கட்கு எப்போது கல்யாணம்?

தினகரன்: அதுபற்றிக் கவலையில்லை எனக்கு.

சாரங்கம்: வருகிற மாதம் உங்கட்குக் கல்யாணமாமே!

தினகரன்: எனக்குத் தெரியாமலா?

சாரங்கம்: தெரியாமலா, தெரிந்துதான்.

தினகரன்: பெண் எங்கே?

சாரங்கம்: புனிதாவைக் கேட்க வேண்டும்.

புனிதா : எனக்கு இங்கே பரீட்சை நடக்கிறதா என்ன? எந்தக் கேள்விக்கும் எனக்குப் பதில் தெரியாததால் எனக்கு பூஜ்யம் போடுங்கள்!

(சாரங்கம், தினகரன் நகைக்கிறார்கள்.)

சாரங்கம்: நாழிகை ஆகிறது. போகலாமா புனிதா?

புனிதா : தினகரர் தகப்பனாரைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

சாரங்கம்: சரி! நான் போகிறேன்.

(போகிறான்)

## காட்சி - 12

### [தீனதயாளன் வீடு]

(புனிதா, தினகரன் பேச்சு)

புனிதா : சாரங்கம் தகப்பனார் இந்த வீட்டை வாங்கியதாக அல்லவா தெரிகிறது. ஆகையால் சாரங்கம் தகப்பனார் குற்றவாளி யல்ல.

தினகரன்: நான் சங்கரனையும் விசாரித்தேன். சாரங்கம் சொல்வது போலவே அவனும் சொன்னான்.

புனிதா : அதனால் சாரங்கம் கொலை செய்தவன் மகன் அல்ல!

தினகரன்: இருவர் பேச்சும் ஒன்று போலிருப்பதால் எனக்குச் சந்தேகம்.

சங்கரன் : (வந்து) ஏனம்மா வீட்டுக்குப் போவோமா? கார் காத்திருக் கிறது.

புனிதா : போகவேண்டியதுதான்!

தினகரன்: ஆம்! நாழிகை ஆகிறது.

(போகிறார்கள்)

## காட்சி - 13

### [சாரங்கம் வீடு, மேல் மாடி - அரை நிலா இரவு]

(ஒரு சோபாவின் மேல் புனிதா உட்கார்ந்திருக்கிறாள். விரகதாபம் அவள் மனக்கண்ணில் நோன்றும் தோற்றம் வருமாறு)

1. சிட்டுக்களும், புறாக்களும் சோலையில் காதல் இன்பம் அனுபவிக்கின்றன.
2. மான்கள் காதல் அனுபவிக்கின்றன.
3. காதலன் காதலி - காதல் இன்பம் நுகர்கிறார்கள். இவைகளால் வருந்துகிறாள்.
4. தினகரன் உருவம் அதன்பின்
5. சாரங்கம் உருவம்

(இச்சமயம் சாரங்கன் வருகிறான்)

புனிதா : யார் நீங்களா... நீங்களா?

சாரங்கம்: புனிதா! என்னை மன்னிக்க வேண்டும். நிலவெரிக்கும் நேரத்தில் நான் மாடிக்கு வருவது வழக்கம், நீ யிருப்பதை மறந்துவிட்டேன்.

புனிதா : அதனாலென்ன!

சாரங்கம்: நீ ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கிடக்கிறாய் என்று நினைக்கிறேன்.

புனிதா : அப்படி ஒன்றுமில்லை.

சாரங்கம்: புனிதா, கீற்றுப் பிறை நீலவானம் பெற்ற குழந்தை போல்! ஒலி! குளிர்ந்த இரவு! இதயத்தில் களங்கம் இருக்க வழி யில்லை. இச்சமயத்தில்தான் உன்னை ஒன்று கேட்கிறேன். என்னை நீ அங்கீகரிக்கிறாயா? உன்னைவிட வேறு எனக்குக் கதியில்லை. உன் சம்மதம் வந்தால்தான் எனக்கு உயிர்வரும்!

புனிதா : (சாரங்கத்தின் முகத்தைக் கவனிக்கிறாள் சந்தோஷத்துடன். பிறகு வேறு பக்கம் திரும்புகிறாள். அவள் இதயத்தில் தினகரன் தோன்றுகிறாள்)

உங்களுக்குச் சிறிது தாமதமாகத்தான் பதில் சொல்லக் கூடும்.

சாரங்கம்: சரி! உன்னை அப்படித் தாமதிக்க வைப்பது எது? அதை என்னிடம் ஒளிக்காதே. நீ என் நிலைமையை உணர வில்லையா?

புனிதா : (யோசிக்கிறாள்) என்னை என்ன சொல்லச் சொல்லுகிறீர்கள்?

சாரங்கம்: என் குடும்பத்தின் தூண்டாமணி விளக்காயிருக்க உன்னைச் சம்மதிக்கச் சொல்லுகிறேன்.

புனிதா : நண்பரே, எனது சங்கல்பத்தை உம்மிடம் சொல்லி விடுகிறேன். என் தந்தையை ஒருவன் கொலை செய்து. என் தந்தையின் புராதன பூஷண பொக்கிஷத்தை அப கரித்துக் கொண்டான். அதை யார் தேடிக் கொடுக்கிறாரோ அவரைத்தான் நான் மணம் செய்து கொள்வேன்.

சாரங்கம்: என்ன பொக்கிஷம்?

புனிதா : எங்கள் முன்னோரில் ஒருவருக்குப் பாண்டியனால் பரிசாகக் கொடுக்கப்பட்ட பூஷண பொக்கிஷம் நவரத்தின சகிதமான நகைகள் அடங்கிய பெட்டி!

சாரங்கம்: அப்படியானால் நீயார் (ஆச்சரியத்துடன்) புனிதா. நான் கொலை செய்யப்பட்ட அந்தப் பூமிநாதன் மகன்! இந்த வீட்டில்தான் என் தந்தை வசித்து வந்தார்.

சாரங்கம்: ஆ! இதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே! என் தந்தை பெயர் கந்தசாமி. இந்த வீட்டை அவர் 10 ஆண்டுகட்கு முன்புதான் வாங்கினார். இவைகளையெல்லாம் தினகர னிடம் சொல்லவில்லையே.

புனிதா : சொல்லியிருக்கிறேன். என் மீது உண்மையான காதல் உள்ளவர்கள் என் புராதன சொத்தை. என் குடும்ப மானத்தை, என் உயிரைத் தேடிக் கொடுக்க வேண்டும்.

சாரங்கம்: எனக்கு உன் மீதுள்ள காதலை நீ சந்தேகிக்கிறாயா?

புனிதா : பயனற்ற கேள்வி இது!

சாரங்கம்: வருந்தாதே. நான் தேடுகிறேன். அதற்காகவே என் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்கிறேன். நான் போய் வருகிறேன்.

புனிதா : நமஸ்காரம்!

(தலைகுனிந்து கொண்டே சாரங்கம் போகிறான்)

## காட்சி - 14

அதே நேரம்:

(புனிதா தன் அறைக்கு வந்து உடைவாளை எடுத்து இடையில் கட்டிக்கொண்டு தினகரன் வீடு நோக்கிப் போகிறாள்)

## காட்சி - 15

### [தினகரன் வீடு]

புனிதா : (கதவைத் தட்டி) யார்?

**தினகரன்:** (கதவைத் திறந்து புனிதா வா!!

(இருவரும் உள்ளே சென்று தனித்தனி நாற்காலியில் உட்கார்ந்து)

புனிதா : சாரங்கம் தன்னை மணந்து கொள்ளும்படி கூறினார். யோசிக்க வேண்டும் என்றேன் நான் என் சரித்திரம் முழுவதும் சொன்னேன்.

**தினகரன்:** சொல்லிவிட்டாயா (ஆச்சர்யமாக)வீட்டைப் பற்றிச் சொல்வதற்கு என்ன சொன்னான்?

புனிதா : சில ஆண்டுகட்குமுன் தமது தகப்பனார் விலைக்கு வாங்கினாராம். அவர் தகப்பனார் பெயர் கந்தசாமியாம்.

**தினகரன்:** அப்போதே தெரியும். அவனை நீ நம்பிவிட்டாய் என்று. உன் தந்தையாரைக் கொலைசெய்த விஷயத்தை நீ சொன்னபோது அவன் முகம் ஏதாவது மாற்றம் அடைந்ததா?

புனிதா : அப்படி ஒன்றுமில்லையே! என் பொக்கிஷத்தை யார் தேடித் தருகிறாரோ அவரைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டேன்.

தினகரன்: புனிதா நான் வருந்துகிறேன். என் உடல் பலகீனமாக இருக்கிறது. அடிக்கடி எனக்குச் சித்தபிரமை உண்டாகிறது. இந்த நிலையில் என்னால் உனக்கு என்ன செய்ய முடியும்?

புனிதா : என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? என் ஆவல் அனைத்தும் விழலாமா?

தினகரம் : உன் ஆவல் வீணாகி விடாது. உன் சொல்லைக் கொண்டு நான் சாரங்கத்தை நல்லவன் என்று மதிக்க வேண்டியிருக்கிறது. ஆயினும் நீ வைத்துள்ள பந்தயத்தில் ஜயிப்பவனை நீ மணந்து கொள்ளுவதாக உறுதி செய்ததை நான் பாராட்டுகிறேன்.

புனிதா : உங்கள் உடம்பை டாக்டரிடம் காட்டலாமே!

தினகரன்: பார்ப்போம்! இதற்கிடையில் சென்னையிலிருக்கும் என் நண்பனையும் அழைக்கலாம் என்று நினைக்கிறேன். எனக்கு பயமாக இருக்கிறது. நான் படுத்துக்கொள்ள உத்தரவு கொடு.

புனிதா : (வருத்தமாக) அப்படியா! நான் போகவா!

தினகரன்: உனக்கும் நித்திரை கெடுகிறதல்லவா?

புனிதா : எனக்கு நித்திரையும் ஒரு கேடா? நான் போய் வருகிறேன். (துக்கத்துடன் போகிறாள்)

## காட்சி - 16

### தினகரன் வீடு

(தினகரன் படுத்துக் கொண்டிருக்கிறான். தெய்வயானை வந்து...)

தெய்வயானை : தினகரா! சாப்பிடாமலா நித்திரை செய்கிறாய்?

அப்பா அப்பா!!

(சமீபத்தில் வந்து) தினகரா!

(தினகரன் புரண்டு படுக்கிறான்.)

என்னப்பா உடம்புக்கு?

தினகரன் : ஒன்றுமில்லையம்மா. அலைச்சல் அதிகம்.

தெய்வ : உன்னை ஒரு விஷயம் விசாரிக்கும்படி சொன்னார் அப்பா!

தினரகன் : என்ன விஷயம்?

தெய்வ : நீ புனிதாவை மணந்து கொள்ள உத்தேசமா?

தினகரன் : என்மீது காதல் கொள்பவளை நான் மணப்பேன்.

தெய்வ : சகஜந்தானே! அப்படியானால் புனிதா உன்னை உண்மையாக நேசிக்கவில்லையா?

தினகரன் : எப்படிச் சொல்ல முடியும்? எவன் அவளுடைய நகைப் பெட்டியைத் தேடித் தருகிறானோ, அவனை மணப்பதாக அல்லவே அவள் கூறுகிறாள்.

தெய்வ : உனக்கு அவளுடைய அழகு, குணம், செயல் பிடிக்கின்றனவா?

தினகரன் : பிடிக்கின்றன. எனக்குச் சம்மதமானால் பாதிக் கல்யாணம் ஆகிவிட்டது என்கிறீர்களா? (நகைக்கிறான்) மேலும் துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்

என்பது என் கொள்கை. புனிதா துணையிழந்தவ விதவை! அம்மா இன்னொரு விஷயம். என் உட பலஹீனமாக இருக்கிறது. அடிக்கடி புத்தி மாறுகிறது டாக்டரிடம் காட்ட வேண்டும்.

தெய்வ : அப்படியா ஐயோ! இதென்னப்பா இப்படி கூறுகிறாய்?

தினகரன் : எனக்குக் கொஞ்சம் பால்சாதம் கொண்டு வாருங்க அம்மா!

(விரைந்து போகிறாள்)

## காட்சி - 17

### சாரங்கன் வீடு

(புனிதா, பூரணலிங்கம் தனியாக)

பூரண : உன் கல்யாண விஷயம் முதலில் முடிந்துவிட்டால் தேவலை.

புனிதா : சாரங்கம் தம்மை விவாகம் செய்துகொள்ளும்படி என்னைக் கேட்டார். என் சரித்திரம் முழுதும் அவரிடம் சொன்னேன்.

பூரண : ஏன்? உனக்கு விருப்பமிருந்தால் உடனே கல்யாணத்தை முடித்துக் கொள்ளலாமே.

புனிதா : என்மீது சாரங்கம் உண்மையான காதல் உடையவரா? அல்லது எனது சொத்துக்கா? என்று தெரியவேண்டும். நான் விதவை. பின்னால் என்னை விலக்கவும் கூடும். என்மீது உண்மையான காதல் உற்றவர் என் நகைப் பெட்டியைக் கண்டுபிடித்து முதலில் என்னிடம் சேர்க்கட்டும் அப்பா!

(போகிறார்கள்.)

## காட்சி - 18

### சாரங்கம் வீடு – அதிகாலை

(சாரங்கம், சங்கரன் பேச்சு)

சாரங்கம் : மாமா அந்தப் பூமிநாதன் மகள்தான் இந்தப் புனிதா. இந்த வீடு தன்னுடையது என்பதும் அவளுக்குத் தெரிந்திருக்கிறது. இனி, என் தந்தைதான் புனிதாவின் பெற்றோரைக் கொலை செய்தார் என்ற உண்மை அவளுக்குத் தெரியாமலாபோய் விடும்? தினகரனும் அவளுக்கு துணையாக இருக்கிறானே! சீக்கிரம் என்னை விவாகம் செய்து கொள்ளும்படி அவளை வேண்டினேன். நகைப் பெட்டியைத் தேடித் தருபவரை நான் மணப்பேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். புனிதாவின் சொத்துக்காக அவளை நான் மணக்க நினைப்பது எவ்வாறு கைகூடும்? நீயே சொல்லு!

சங்கரன் : அதைத் தேடுவதாக நீ கூறினாயா?

சாரங்கம் : வேறுவழி அப்படித்தான் சொன்னேன். பெட்டி எங்கே இருக்கிறது? அணுவளவுகூடப் பெட்டியைப் பற்றித் தகவல் கிடைக்கவில்லையே. நாமும் பல ஆண்டுகளாகத் தான் விசாரிக்கிறோம்.

சங்கரன் : தைரியத்தை விடாதே. இரும்புப் பெட்டியை அவர்கள் தினகரன் வீட்டில் வைத்திருக்கிறார்கள் பார்த்தாயா? எதற்கும் ரங்கு அங்கு இருக்கிறான். அவன் உதவியைத் தேடிக்கொள்ளவேண்டும். போய் நித்திரை செய்!

(போகிறார்கள்)

## காட்சி - 19

### தினகரன் வீடு.

(தினகரன் வெறிபிடித்த நிலையில், கண்ணாடியை உடைக் கிறான். புத்தகங்களைக் கிழிக்கிறான். பாதரட்சைகளைக் கையில் எடுத்து அணைத்து முத்தமிடுகிறான். சிரிக்கிறான், குதிக்கிறான். இதைப் புனிதா, அறைக்கு வெளியில் இருந்து பார்த்து வருந்துகிறாள். ஓடிப் போகிறாள். பிறகு தினகரன் தாய், தந்தையாரை அழைத்து வந்து காட்டுகிறாள்.)

தந்தை : அப்பா! அப்பா! அந்தோ ஆசைக்கொரு பிள்ளையாயிற்றே. (துக்கம்)

தெய்வ : (ஓடி நெருங்கி) அப்பா, என்னடா உனக்கு? (கண்ணீர்)

தீனத : சங்கரா!

சங்கரன் : இதோ வந்துவிட்டேன்.

தீனத : டாக்டரைப் போய் அழைத்துவா!

(டாக்டர் வருகிறார்)

டாக்டர் : நீங்கள் அனைவரும் கூடத்தில் போய் உட்காருங்கள். தனியாக நான் நோயாளியின் செய்கையைக் கவனிக்க வேண்டும்.

(அனைவரும் கூடத்தில் தலை குனிந்து நாற்காலிகளில் உட்காருகிறார்கள்.)

தீனத : புனிதா, வருந்தாதே. என் துரதிருஷ்டம் அம்மா!

(புனிதா எழுந்து தினகரனைப் பார்க்கப் போகிறாள். வழியில் சங்கரன் புனிதாவை நோக்கி)

சங்கரன் : நீயேன் வருந்துகிறாய்? அவன் தேறுவானென்று எனக்கும் தோன்றவில்லை. பசிவேளை, நீ வீட்டுக்குப் போ.

புனிதா : (பழையபடி கூடத்துக்குத் திரும்புகிறாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) டாக்டர் இன்னமா பரிசோதிக்கிறார்?

தீனத : அதோ வருகிறார். என்ன செய்தி டாக்டர்?

டாக்டர் : அயர்ந்து படுத்திருக்கிறார். இப்போது எழுப்புவது உசிதமல்ல. விழித்ததும் வந்து பார்க்கிறேன். ஆபத்தொன்று மில்லை. சொஸ்தமாகிவிடும்.

சங்கரன் : புனிதா! வா! கார் காத்திருக்கிறது.

(வருத்தத்துடன் போகிறாள்)

## காட்சி - 20

### (புதுவையின் புறத்தில் ஒரு கிராமம்

(ரங்கு, தன் கொள்ளைக்காரர், சங்கரன். ரங்கு தன் ஆட்களுடன் ஓர் ஆலமரத்தடியில் கட்குடித்துப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். சங்கரன் வருவதைக் கண்டு ரங்கு தனியாக வந்து...)

ரங்கு : வாங்க ஐயா.

சங்கரன் : இதோ கார் கொண்டு வந்திருக்கிறேன். சுமார் 10பேர் பலசாலிகளாக அழைத்துக் கொண்டு கிளம்பு! புனிதாவும், அவள் தகப்பனும் செஞ்சிக்கு அதோ கிளம்பிவிட்டார்கள்.

ரங்கு : அடே! புறப்படுங்கள். பத்துப்பேர்.

(காரில் ஏறிக் கொண்டார்கள்.)

சங்கரன் : நான் சொல்லியதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா?

ரங்கு : இதென்ன வெக்கக்கேடு. அதுக்குள்ளவா மறந்துவிடுவேன்?

சங்கரன் : சரி. போய் வா!

(போகிறார்கள்)

## காட்சி - 21

### செஞ்சிக்காடு – மாலை 6 மணி.

(செஞ்சிப் பாதையில் புனிதாவின் காரை, ரங்கு கார் வேகமாகத் துரத்துகிறது. ரங்கு கார் முன்னே ஓடி உடனே திரும்பிப் புனிதாவின் காரை மறிக்கிறது. புனிதா, பூரணலிங்கம், டிரைவர் ஆகிய மூவரையும் பிடித்துக் கைகால்களைக் கட்டுகிறார்கள். வாயில் பொத்துகிறார்கள். பிறகு மூவரையும் தமது காரில் வைத்துக் காட்டுக்குள் நுழைகிறார்கள். புதர்கள் அடர்ந்த பெரிய பாறையின் பக்கத்தில் உள்ள பள்ளத்தாக்கில் புனிதா ஒரு மரத்தடியில் கட்டப்படுகிறாள். ரங்கு ஒரு தாள், பேனாவை எடுத்துப் பூரணலிங்கத்திடம் கொடுத்துக் கட்டையவிழ்த்து விட்டு...)

ரங்கு : நான் சொல்லுவதைப் போல் எழுத வேண்டும். இல்லை, ஒன் மகள் செத்தாள்.

பூரண : (எழுத ஆரம்பிக்கிறார்)... (இதற்குள் அவர்களை நோக்கி வேகமாக ஒரு கார் ஓடிவருகிறது. அந்தக் காரில் முகமூடிய ஒரு கறுப்பு உடை போர்த்தப்பட்ட மனிதன் நான்கு திசைகளையும் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறான்.)

ரங்கு : நான் சொன்னபடி எழுதினாயா? (வாங்கிப் படிக்கிறான்) கையொப்பம் இடு.

புனிதா : அப்பா கையொப்பமிடாதீர்கள்.

ரங்கு : இதோ பார் கத்தி! கொன்றுவிடுவேன்.

பூரண : (கையொப்பம் இடுகிறார்) இதோ உங்கள் இஷ்டப்படி! ஐயா எம்மை ஒன்றும் செய்யாதீர்கள்!

பூரண : கட்டிவை இவனையும்!

(ஒருவன் பூரணலிங்கத்தைக் கட்டுகிறான் மரத்தில். இதற்குள் முகமூடியாகிய கருஞ்சிறுத்தை ஒருபக்கம் காரை நிறுத்தி குதித்தோடி வந்து ரிவால்வரை நீட்டுவது கண்ட ரங்கும், அவனது ஆட்களும் பூரணலிங்கத்தை மறக்கிறா

தூக்கிக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். இரண்டு கார்களில் ஏறிக் கொண்டு! புனிதாவின் கட்டுகளைக் கருஞ்சிறுத்தை அவிழ்த்து விடுகிறான்.)

கருஞ் : அந்தப் பெரியவர் உனது தந்தையா?

புனிதா : ஆம் ஐயா. நீங்கள் யார்?

கருஞ் : அதிருக்கட்டும். உன் தந்தையிடம் என்ன கேட்டார்கள்?

புனிதா : ஒரு கடிதம் எழுதச் சொல்லி வாங்கிக் கொண்டார்கள். அந்தக் கடிதத்தில், நண்பர் தீனதயாளன் அவர்கட்கு எழுதுவது: எனக்குச் சொந்தமாகிய இரும்புப் பெட்டியை உடனே இது கொண்டு வரும் ஆட்கள் வசம் கொடுத்தனுப் பவும். நாங்கள் வேறுதேசம் போய் மறைந்து வசிக்க வேண்டும். இப்படிக்கு. பூரணலிங்கம்.

கருஞ் : இரும்புப் பெட்டி என்ன பெறும்?

புனிதா : 20 லட்சம் பெறக்கூடிய - தங்கக்கட்டிகளும், நோட்டு களும் அதில் இருக்கின்றன.

கருஞ் : அப்படியா? காரில் ஏறிக் கொள்! விரைவாக!

(போகிறார்கள் - காரில் ஏறிக் கொள்ள, கார் அடுத்துள்ள சேரியில் நிற்கிறது. கருஞ்சிறுத்தை ஓர் குடிசைக்குள் நுழைந்து அங்கிருந்த ஒருவனிடம் ஏதோ சொல்லுகிறான்.)

பறையன் : அம்மா வாருங்கள். இதற்குள் பத்திரமாக இருக்கலாம்.

கருஞ் : உன் தந்தையைத் தேடிப்பிடிக்கிறேன். நான் வரும் வரைக்கும் இதில் இரு

(கார் போகிறது)

## காட்சி - 22

### செஞ்சிக்காடு – ஆலமரத்தின் அடியில்

ரங்கு : (கூட்டத்தினரைப் பார்த்து) இந்த ஆலமரத்தின் அடியில் இந்தக் கிழவனைக் கட்டிப் போட்டு இரண்டு பேர் காவல் இருங்கள். நான்கு பேர் புதுவைக்குக் காரில் போய் - குருக்கள் தந்த கடிதம் இந்தா. அதன்படி செய்யுங்கள். வழியில் கருஞ்சிறுத்தையைக் கண்டால் விடாதீர்கள். நான் போக வேண்டும்.

பூரண : உங்கட்கு வேண்டிய பொருள் கொடுக்கிறேன். என்னையும், என் பெண்ணையும் விட்டுவிடுங்கள்.

ரங்கு : நீ என்னடா குடுப்பது?

(அனைவரும் கள்ளு குடிக்கிறார்கள்)

## காட்சி - 23

(கருஞ்சிறுத்தையின் கார் வேகமாகப் போகிறது. ரங்குக் கூட்டத்தைச் சேர்ந்த நால்வர் ஏறிப்போகும் கார் அதற்கு முன்னே போவதைக் கருஞ்சிறுத்தை பார்க்கிறான். இரு காரும் நெருங்குகிறது. கருஞ் சிறுத்தை தன் காரிலிருந்து எதிரிகள் காரில் தாவிக் குதித்து நால்வரையும் எதிர்த்துச் சண்டையிட்டு ஒவ்வொருவராகக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கீழே போடுகிறான். கார் போகிறது. டிரைவர்... ... ... நடுங்குகிறான். கார் நிற்கிறது)

கருஞ் : பெரியவரை எங்கே வைத்திருக்கிறீர்கள்?

டிரைவர் : நீங்க சண்டை போட்டு அந்தப் பெண்ணை அழைச்சிகினு போனீங்களே. அதுக்கு ஒரு மைல் கெழக்கே வந்தா ஒரு ஆலமரம் இருக்கும். அங்கே அவரைக் கட்டிப் போட்டு நாலு பேரே காவல் வைச்சிருக்கான் ரங்கு.

கருஞ் : சரி நீ போ! இப்படியே....

டிரைவர் : ஒரு பீடி இருந்தா குடுங்க.

கருஞ் : இந்தா காசு. பீடி வாங்கிக்கொள். அதென்ன சட்டைப் பையில்?

டிரைவர் : ஒண்ணுமில்லே.

கருஞ் : எடு!

(தானே அதைப்பிடுங்கி வாசிக்கிறான்.)

நண்பர் ரங்குவுக்கு, சிவன் கோயில், நடராஜ குருக்கள் எழுதியது. இன்று இராத்திரி சுமார் ஒரு மணிக்கு, தர்மகர்த்தா சுந்தரம் வீட்டில், நான் சொல்லிய தங்கக் கட்டியை, ஒரு கருமானைக் கொண்டு வெட்டி, ஐந்து தர்மகர்த்தர்களும் பங்கு பிரித்துக் கொள்ளப் போகிறார்கள். அந்தச் சமயம் ஆட்களை அனுப்பி வைக்கவும்.

இப்படிக்கு,
உன் பக்ஷம் மறவாத
நடராஜ குருக்கள்.

குருக்களில் இவர் கொஞ்சம் தீவிரவாதி போலிருக்கிறது. சரி! போய்வா நீ.

(கருஞ்சிறுத்தை காரில் ஏறிப் புதுவை நோக்கி போகிறான்.)

## காட்சி - 24

### அதே இரவு

(ரங்கு ஆட்கள் ஏறியுள்ள கார் தீனதயாளன் வீட்டெதிரில் நின்றது. நால்வர் வீட்டினுள் போகின்றார்கள். அச்சமயம், வீட்டில் தீனதயாளன், சங்கரன், சாரங்கம் உட்கார்ந்திருக் கிறார்கள்.)

1-வது ஆள்: (தீனதயாளனிடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான். தீனதயாளன் கடிதத்தை வாசித்துவிட்டு) என்ன ஆச்சரியம்! (கடிதத்தை சங்கரனிடம் கொடுக்கிறான்)

சங்கரன் : "நண்பர் தீனதயாளன் அவர்கட்கு பூரணலிங்கம் வந்தனம். என்னுடைய இரும்புப் பெட்டியை அப்படியே இக் கடிதம் கொண்டு வருபவர் வசம் அனுப்பவும். எங்களுக்கு ஏற்பட்டிருக் கும் சர்க்கார் நெருக்கடி யினால் நாங்கள் தூரதேசம் போய்ச் சிலகாலம் மறைந்து வசிக்க வேண்டும். மற்ற விவரம் பிறகு!

தங்கள் பூரணலிங்கம்".

... ... ... அட. இதென்ன?

சாரங்கம் : அவர்களை ரகசியப் போலீசார் சுற்றிக் கொண்டிருந் தார்கள். அப்போதே எனக்கு மாத்திரம் சந்தேகந்தான்! பெட்டியைக் கொடுத்து அனுப்பி விடுங்கள். உங்கள் மீது குற்றம் ஏற்படுவதற்குள்!

தீனத : அதோ ... ... அந்த ணஅறையில்!

(மற்ற மூன்று ஆட்கள் தூக்கிப் போகிறார்கள்.)

1-வதுஆள் : சாவி?

(தீனதயாளு சாவியை, எழுந்து சென்று தேடிப் பார்த்து விட்டு)

தீனத : சாவி அவர்களிடந்தானிருக்கிறது.

1-வது ஆள்: சரி போய் வருகிறோம்.

(போகிறார்கள்.)

## காட்சி - 25

### தர்மகர்த்தா வீடு – இரவு 1 மணி

(கருமான் தங்கக் கட்டியை உளி கொண்டு வெட்டப் போகிறான். தர்மகர்த்தர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்)

சுந்தரம் : சத்தம் அதிகமாய்க் கேட்கக் கூடாது.

(வெட்டுகிறான்)

(வெளியில் கருஞ்சிறுத்தை வந்து சத்தத்தைக் கவனித்து வீட்டின் மேல் ஏறி வாசலில் குதிக்கிறான். அனைவரும் திடுக்கிடுகிறார்கள். கருஞ்சிறுத்தை ரிவால்வரைக் காட்டி அனைவரையும் ஒரு பக்கமாகப் போகும்படி சைகை காட்டுகிறான். நடுங்குகிறார்கள். கருஞ்சிறுத்தை, தங்கக் கட்டியைத் தூக்கிக் கொண்டு.

கருஞ் : நீங்கள் சிவன்கோயில் கட்டுகிற சேதி இப்படித் தானோ உங்கள் கோயில் குருக்கள் சேதி தெரியுமா? இதைப் பாருங்கள்.

(என்று சொல்லித் தன் கையில் இருந்த கடிதத்தை அவர்கள் எதிரில் எறிந்துவிட்டுத் தெருக்கதவைத் திறந்து கொண்டு போகிறான்.)

சுந்தரம் கடிதம் வாசிக்கிறான்.

## காட்சி - 26

(ரங்கு செஞ்சிக் காட்டில் ஆட்களுடன் இருக்கையில் கருஞ்சிறுத்தை யால் துரத்தப்பட்ட டிரைவர் வருகிறான்.)

ரங்கு : கருஞ்சிறுத்தையிடம் காரைப் பறிகொடுத்து விட்டா யல்லவா?

டிரைவர் : கடிதத்தையும் பிடுங்கிக் கொண்டான் கருஞ்சிறுத்தை!

ரங்கு : கருஞ்சிறுத்தை புனிதாவை எங்கே விட்டுப் போயிருக்கக் கூடும்?

டிரைவர் : அநேகமாக இந்தச் சேரியில்தான் பதுக்கி வைத்திருப்பான் என்று நினைக்கிறேன்.

ரங்கு : போய்த் தேடுவோம் வாருங்கள்.

(அனைவரும் போகிறார்கள்)

## காட்சி - 27

[சேரியில்]

1-வது ஆள்: யாரடா சேரியில்?

சேரி ஆள் : ஏன் சாமி!

1-வது ஆள்: வெளியில் வா. அந்தப் பெண் எங்கே?

சேரி ஆள் : கூவாதிங்க! இருக்கு!

ரங்கு : இழுத்து வா அவளை.

(1-வது ஆள் புனிதாவை இழுத்து வருகிறான்.)

(2-வது ஆள் அந்தச் சேரியானையும் பிடித்துக் கொள்ளுகிறான். மற்ற கொள்ளைக்காரர்கள் சேரி மக்களை அடித்துத் துரத்துகிறார்கள்.)

ரங்கு : இருவரையும் அந்தக் குடிசையில் தள்ளு! கதவை அடை! உள்ளே இருக்கும் கம்பத்தில் இறுகக் கட்டு.

(அவ்வாறு செய்து குடிசைக்குத் தீ வைத்துப் போகிறார்கள். குடிசை தீப்பற்றி எரிகிறது. அச்சமயம் கருஞ்சிறுத்தை காரில் வருகிறான். தீ எரிவதைக் கவனித்து ஓடிவந்து குடிசையின் வெளிப் பூட்டை உடைத்து உட்புகுந்து தூக்கி வந்து வெளியே கிடத்துகிறான்.)

புனிதா : யார்? என்னுடன் இருந்தவர் எங்கே?

(கருஞ்சிறுத்தை மீண்டும் உட்புகுந்து சேரி ஆளைக் காப்பாற்றுகிறான்.)

சேரி ஆள் : ஐயா நீங்கள் ஒரு நிமிஷம் கழித்து வந்திருந்தால் நாங்கள் சாம்பலாகிப் போயிருப்போம்.

கருஞ் : சரி, நான் பிறகு வந்து கூரை கட்ட நிறையப் பணம் தருகிறேன். புனிதா எழுந்திரு! அதோ கார்!

புனிதா : ஐயா நீங்கள் யார்? எனக்கு ஏன் இத்தனை உபகாரம் செய்கிறீர்கள்? நான் இதற்கு எல்லாம் பிரதியுபகாரமாக என்ன செய்ய முடியும்?

கருஞ் : என்னை இன்னாரென்று தெரிந்துகொள்ள நீ ஆசைப்படாதே. நீ எனக்குப் பதில் உதவி ஒன்றும் செய்ய வேண்டாம். உனது ஞாபகார்த்தமாக நீ விரலில் அணிந்திருக்கும் மோதிரத்தைக் கொடு.

புனிதா : இதோ, (மோதிரத்தைக் கொடுக்கிறாள். கருஞ்சிறுத்தை விரலில் அணிந்து கொண்டு... ...)

கருஞ் : புனிதா! நேரத்தை வளர்த்தலாகாது. காரில் ஏறு!

(புனிதா ஏறியதும் கார் போகிறது)

## காட்சி - 28

செஞ்சிக்காடு - ஆலமரத்தின் அடியில்.

(கருஞ்சிறுத்தை, ஆலமரத்திற்கு இப்புறமே காரை நிறுத்தி...)

கருஞ் : புனிதா காரிலேயே நீ இரு! நான் இதோ வந்து விடுகிறேன்.

புனிதா : ஏதாகிலும் ஆபத்து நேருமோ என்னமோ.

கருஞ் : இவ்வுலகமே ஆபத்தானதுதானே!

(ஆலமரத்தின் அடியில் கட்டிப் போட்டிருந்த பூரணலிங்கமும், நால்வரும் தூங்குகிறார்கள். கருஞ்சிறுத்தை பூரணலிங்கத்தை எழுப்பி, கட்டோடு தூக்கிக் கொண்டு வந்து காரில் போட்டுக் கட்டை அவிழ்த்துவிடுகிறான்.)

பூரண : விழித்துப் பார்த்து) அம்மா, இருக்கிறாயா?

புனிதா : இதோ இவர் கருணையிருந்ததால்தான் இருக்கிறேனப்பா! இல்லாவிட்டால் சேரியில் இந்நேரம் வெந்து நீறாகியிருப்பேன்.

பூரண : அப்படியா! இந்த மீளாத தொல்லையில் புழுப் போல் துடிக்கிறோமே, இதற்கு முடிவில்லையா? என்னால் பேச முடியவில்லை. ஐயா, நீங்கள் யார்?

கருஞ் : நான் யாரோ! அது தெரியவேண்டாம்.

பூரண : எமக்கு இந்தத் தொல்லை விளைப்பவர் யார் என்பதாவது தெரிகிறதா உங்கட்கு?

கருஞ் : உங்கட்குத்தான் தெரியவேண்டும். நேரமாகிறது.

(கார் புதுவைக்குப் போகிறது.)

## காட்சி - 29

### சாரங்கம் வீடு – மேல்மாடி.

புனிதா : அத்தப் பொக்கிஷமானது எனது குடும்பத்தின் மகோன் னதத்தைக் காட்டப் போதிய உதாரணமாகும். மேலும் நவரத்ன ஆபரணங்கள் நிறைந்தது. நண்பரே, அது பற்றி நீங்கள் சிறிதும் கவலை கொள்ளவில்லை.

சாரங்கம் : (சிரித்து) புனிதா அதுபற்றி நான் இரவும், பகலும் வேலை செய்துவருவது இப்போது தெரியாவிடிலும் பிறகு தெரியும்.

புனிதா : (ஆச்சரியமாக) அப்படியா? (புனிதா சாரங்கத்தின் முகத்தை உற்று நோக்குகிறாள். அவள் இதயத்தில் சாரங்கம் கருஞ் சிறுத்தையாக மாறுவதான ஒரு தோற்றம் உண்டாகிறது) எனக்கும், என் தந்தைக்கும் இடைவிடாது துன்பத்தை யுண்டாக்கி வருவது யார் என்பது விளங்க வில்லையே எங்கள் இரும்புப் பெட்டியின் கதி என்ன ஆயிற்று? (திடுக் கிட்டு) நான் போய் தீனதயாளுவைப் பார்க்கவேண்டும்.

(எழுந்து தன் தந்தையிடம் ஓடிவிடுகிறாள்.)

## காட்சி - 30

### சாரங்கம் வீடு – கூடம்

(பூரணலிங்கம் துக்க சாகரத்தில் ஆழ்ந்தவராய் ஓர் சாய்வு நாற்காலியில் கிடக்கிறார்)

புனிதா : அப்பா இரும்புப் பெட்டியின் கதி என்ன?

பூரண : அம்மா அம்மா! இரும்புப் பெட்டி போய் விட்டது. நான் ஆஸ்திரேலியாவில் உழைத்த உழைப்பின் பயன் அனைத்தும் ஒரு நொடியில் மறைந்து போயின. துளித் துளியாய்ச் சேர்த்த தேன்கூட்டைப் பறிகொடுத்து ஏங்கும் தேனீ ஆனேன்.

(மூர்ச்சை அடைதல்)

புனிதா : அப்பா, அப்பா (தந்தையின் முகத்தை நிமிர்த்திப் பார்க்கிறாள்) வயோதிக காலத்தில் நீங்கள் அனுபவிக்கும் இத்தனை துன்பத்துக்கும் காரணம் பாவியாகிய நானல்லவா? என்ன செய்வேன்! யாராகிலும் போய் தீனதயாளுவை அழைத்து வாருங்கள்.

சங்கரன் : இதோ நான் போய் அழைத்து வருகிறேன்.

(போகிறான்)

புனிதா : (அங்கு வந்து உட்கார்ந்திருக்கும் சாரங்கத்தை நோக்கி) ஐயா! எப்படியாவது இரும்புப் பெட்டியைத் தேடித் தரமுடியாதா உங்களால்?

... .. இச்சமயம் வெறிபிடித்த தினகரன் வந்து விடுகிறான்.

புனிதா : சொத்துப் போன ஏக்கத்தால் என் தந்தையின் உயிர் போய் விடும் போலிருக்கிறதே. என்ன செய்யலாம்?

சாரங்கம் : உன் விஷயத்தில் சிரத்தை கொள்ளும்படி நீ மனிதரைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை. இது உன் குற்றந் தானே! வீணில் வருந்துவதில் பயன் என்ன?

புனிதா : என்னை, என்ன செய்யும்படி கூறுகிறீர்கள்?

சாரங்கம் : உனக்கு ஏற்பட்ட இன்ப துன்பங்கள் எனக்கு ஏற்பட்டதாக நான் நினைக்க வேண்டுமல்லவா?

புனிதா : ஆம்! அப்படி நினைக்கும்படி தான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சாரங்கம் : அதற்குத் தக்க உறுதி கூறவேண்டியவள் நீயல்லவா?

புனிதா : கல்யாண விஷயத்திலா கேட்கிறீர்கள்? இரும்புப் பெட்டி வந்தால் என் தந்தை நிச்சயம் பிழைப்பார்.

சாரங்கம் : தேடுவோம். நிச்சயமாகக் கிடைக்கும்.

புனிதா : கொடுத்தால் என்னுள்ளம் உங்கட்குக் கடமைப் பட்டதாகி விடாதா?

சாரங்கம் : ஆனால் புறப்படு! கார் தயாராக இருக்கிறது.

புனிதா : தடையில்லை (இருவரும் காரில் ஏறுகிறார்கள்)

## காட்சி - 31

### அதே இடம்

தீனதயாளு பூரணலிங்கத்திடம் வந்து உட்கார்ந்து, நண்பரே, நண்பரே! (பூரணலிங்கம் விழிக்கிறார்) என்ன உடம்புக்கு?

பூரண : ஒன்று ... ... மில்லை ... ... இரும்புப் பெட்டி

தீனத : எங்கும் போய்விடாது. தைரியமாக இருங்கள். இது வரைக்கும் உதவி செய்த அந்த கருஞ்சிறுத்தை இனி உதவி செய்யாமலா இருந்துவிடுவார்? தைரியத்தை விடாதீர்கள்.

சங்கரா டாக்டரைக் கூட்டிவா.

(சங்கரன் போகிறான்)

## காட்சி - 32

(செஞ்சிக்காட்டில், அதாவது செஞ்சிக்கு மூன்று மைல் கிழக்கி லிருக்கும் பாறையைச் சார்ந்த பள்ளத்தாக்கு. அங்கே இரும்புப் பெட்டியை ரங்கும், மற்றும் ஆட்களும் சேர்ந்த கற்களால் உடைக்கிறார்கள். சாரங்கம், புனிதா இருவரும் காரில் வந்து அங்கு இறங்குகிறார்கள்.)

சாரங்கம் : அடே நிறுத்துங்கள். பெட்டியைத் தூக்கிக் காரில் வையுங்கள்.

ரங்கு : என்னா சங்கதி? வழிக்கு வந்துட்டாங்களா?

சாரங்கம் : ஆம், இனி நீங்கள் புனிதாவின் காப்பாளர்.

ரங்கு : ஆயினும் இதுவரைக்கும் என் பிரயாசைக்கு ஏதாவது கொடுக்க இல்லாவிட்டா, பொட்டி மேலே வெரல வைக்க வேண்டாம்.

சாரங்கம் : பிறகு தருகிறேன்.

ரங்கு : முடியாது. யாரைக் குல்லா போட பாக்கிறீங்க?

சாரங்கம் : இதன் சாவி எங்கே புனிதா?

புனிதா : என்னிடம் இல்லையே!

(இச்சமயம் சாவி வந்து விழுகிறது. பாறையின் மேலிருந்து! அந்தச் சாவியின் கருஞ்சிறுத்தை என்ற சீட்டு ஒன்று தொங்குகிறது.)

சாரங்கம் : (அதை எடுத்து வாசித்துவிட்டு) கருஞ்சிருத்தை வந்து விட்டான்.

புனிதா : அவரும் இனி நம் நண்பர்தானே.

சாரங்கம் : அப்படியானால் சரி! எங்களை கருஞ்சிறுத்தை ஒன்றும் செய்யாதிருக்கும்படி நீ ஏற்பாடு செய்யவேண்டும்

(சாவியை எடுத்துப் பெட்டியைத் திறக்கிறார். பெட்டியி லிருந்து ஒரு பூனை குதித்து வெளியில் ஓடுகிறது. மற்றும்

பெட்டிக்குள் துடைப்பம், முறம், எந்திரம், அம்மி முதலியவை இருக்கின்றன. தங்கப்பாளம், நோட்டு ஒன்றுமில்லை)

கருஞ் : கல்யாணம் எப்போது?

சாரங்கம் : ரங்கு! கருஞ்சிறுத்தையைப் பிடி! (ஆட்கள் ரங்கு அனைவரும் பாறையின் மீதேறிக் கருஞ்சிறுத்தையைத் தொடர்கிறார்கள். கருஞ்சிறுத்தை வேறு வழியாக ஓடித் தன் காரில் ஏறிக்கொண்டு போய் விடுகிறான்.)

சாரங்கம் : (புனிதாவை நோக்கி) கருஞ்சிறுத்தை ஏய்த்தான் உன்னை.

புனிதா : என்னையும், என் தந்தையையும் காப்பாற்றிய உத்தமர் அவர்.

சாரங்கம் : பெட்டியிலிருந்த பணம் எங்கே? தங்கக்கட்டிகள் எங்கே?

புனிதா : அவரே எங்கட்குக் தேடித்தரக்கூடும்.

சாரங்கம் : மோசம் போகிறாய், கருஞ்சிறுத்தைமேல் சர்க்காருக்குப் பிராது கொடு. உன் காரியம் சித்தியடையும். உன் தந்தையும் பிழைப்பார்!

புனிதா : எங்கள் இரும்புப் பெட்டியைக் கருஞ்சிறுத்தை எடுத்திருந் தால் அதைவிட நாங்கள் அவருக்குத் தரும் பரிசு வேறென்ன இருக்க முடியும்?

சாரங்கம் : பொருள் இல்லாவிட்டால் உன்னை எவன் மணப்பான்? நீ தாலியறுத்தவளாயிற்றே.

புனிதா : நண்பரே! பணத்துக்காக மணம் செய்ய நினைப்பவனை நான் மணப்பதாக உத்தேசமில்லை.

சாரங்கம் : அப்படியனால் கல்லறையில்தான் உனக்குக் கலியாணம்.

புனிதா : சந்தோஷம் நண்பரே! என் தந்தையின் கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை.

சாரங்கம் : ஆனால் சீக்கிரம் நடந்து ஓடு!

புனிதா : அதுவும் சரிதான்.

(புனிதா ஓடுகிறாள்)

## காட்சி - 33

### செஞ்சிப்பாதை

(புனிதா ஆத்திரத்தோடும் தன் தந்தையின் நிலையைக் காணும் அவாவோடும் ஓடிவருகிறாள். வரும் வழியில், மண்ணில் எழுத்துக்கள் காணப்படுகின்றன. அதை வாசிக்கிறாள். ஒரு விநாடி நிதானித்துச் சிரிக்கிறாள்.)

எழுதியிருந்தது:-

"சாரங்கத்தால் நீ கால்நடையாகத் துரத்தப்படுவாயானால், ஆயாசப் படாதே. கொஞ்ச தூரத்தில் நான் காரை நிறுத்தி வைத்திருக் கிறேன். கருஞ்சிறுத்தை"

பின்னர் சிறிது தூரம் ஓடுகிறாள். கார் நிற்கிறது.

கருஞ் : சாரங்கம் எங்கே? கார் எங்கே?

புனிதா : நீங்கள் மண்ணில் எழுதியது போலவே ஆயிற்று.

கருஞ் : பயப்படாதே ஏறு?

புனிதா : பெட்டியில் ஒன்றுமில்லையென்று தகப்பனாரிடம் சொன்னால் அவர் கதி என்ன ஆகும்.

கருஞ் : நடந்ததைத்தானே கூறவேண்டும்? ஏறு, நாழிகை ஆகிறது.

(ஏறுகிறார்கள். புதுவை நோக்கி கார் போகிறது)

## காட்சி - 34

### சாரங்கம் வீடு

(பூரணலிங்கம் படுத்தபடுக்கையில் இருக்கிறார். சமீபத்தில் புனிதா சஞ்சலத்தால் தலைசாய்ந்து கிடக்கிறாள். மற்றவர்களும் விசனத்துடன் இருக்கிறார்கள். சங்கரன், சாரங்கம் நடப்பதைக் கவனித்து வருகிறார்கள்)

டாக்டர் : (பரிசோதனை செய்துவிட்டு) வியாதி ஒன்றுமில்லை. மனோவியாகூலமாக இருக்கலாம்.

புனிதா : (தலைநிமிர்ந்து கண்ணீரும் கம்பலையுமாய்)

சுமார் இருபதுலட்சம் ரூபாய் கையைவிட்டுப் போயிற்று. இது ஒரு வருத்தம். இன்னொன்று "தமக்குப் பின்னால் என் நிலைமை என்ன ஆகுமோ" என்பது தான்.

டாக்டர் : இரு காரணங்களும் சரியே! "தமக்குப்பின் தம் பிள்ளை பெண்டாட்டி எவ்வாறு வருந்துவார்களோ" என்ற சஞ்சலமே உலகத்தில் நடைபெறும் பரிதாப சம்பவங்களுக் கெல்லாம் காரணமாக இருக்கிறது. இந்த சஞ்சலத்தை எந்தத் தேசச் சர்க்கார் நிவர்த்தி செய்கிறதோ, அந்தத் தேசந் தான் இன்ப மயமான தேசம். தேசமக்களின் நன்மைக்காக சர்க்கார் இருக்கிறது என்றால், அந்தச் சர்க்கார் தேசக் குழந்தைகளை வளர்க்கும் கடமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் எல்லோருக்குமே தாயும், தந்தையுமாகவே இருக்க வேண்டும் என்ன செய்வது?

(இச்சமயம் பூரணலிங்கம் கண்விழிக்கிறார்)

புனிதா : அப்பா, என்ன உங்களுக்கு? வாய்திறந்து சொல்லுங்கள்.

பூரண : பெ ... ட் ... டி! க ... ல் ... யா ... ண ... ம்!!

தீனத : கருஞ்சிறுத்தையிடந்தான் பெட்டி இருக்கும். எங்கும் போகாது.

பூரண : கருஞ்சிறுத்தை எங்கே? கண்ணால் பார்க்க வேண்டும். (அவாவுடன்) அவராவது என் மகளுக்குத் துணையிருந்தால் ஒரு குறைவும் இருக்காது.

புனிதா : அவர் துணையிருப்பார். நீங்கள் எழுந்து உட்காருங்கள் அப்பா!

பூரண : என்னால் எழுந்திருக்க முடியாதம்மா. உன்னைப் பற்றிய அன்பால்தான் என் உயிர் நீடிக்கிறது. ஆயினும் இன்னும் அதிக நேரம் நீடிக்க வழியில்லை.

(இச்சமயத்தில் கூடத்தில் ஒரு மூலையில் கருஞ்சிறுத்தை தோன்றுகிறான். அனைவரும் எழுந்து மரியாதை செய்கிறார்கள்.)

(புனிதா எழுந்து நின்று)

புனிதா : அப்பா, அப்பா! அதோ அவர்!

பூரண : (மெதுவாகத் தன் தலையைத் திருப்பிப் பார்த்துச் சிரமத்துடனும் பரபரப்புடனும் எழுந்து அடிமேல் அடி எடுத்து வைத்து நாலடி நடந்து)

என் மகளைக் காப்பாற்றுங்கள்!

கருஞ் : தைரியத்தை விடாதீர்கள். உங்களுக்கும், புனிதாவுக்கும் ஒரு குறையுமில்லை.

பூரண : அப் ... பப ... டி ... யா ... சந் ... தோ ... ஷம். இரும்புப் பெட்டி?

கருஞ் : அதிலுள்ள ஒரு தம்பிடிக்கூடத் தவறாமல் காப்பாற்றி வைத்திருக்கிறேன். (அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்கிறார்கள்) நீங்கள் கோயில்கட்டக் கொடுத்த தங்கக் கட்டியை, கோயில் தர்மகர்த்தர்களும், குருக்களும் ஏப்பமிட இருந்தார்கள். அதையும் காப்பாற்றி வைத்திருக்கிறேன். எல்லாம் தீனதயாளன் வீட்டுக் கிணற்றிலும், களஞ்சியத்திலும் இருக்கின்றன.

தீனத : புனிதா, வா! எடுத்துவரலாம். (ஓடுகிறார்கள்.)

பூரண : அப்படியா? மிக்க சந்தோஷம். நானும், புனிதாவும் எங்கள் சொத்தும், உங்கள் சொந்தப் பொருள்!

கருஞ் : மனித சமூகம் பலஹீனமானது. ஒருவருக்கொருவர் உதவி செய்வதன் மூலம் அதை நிவர்த்தி செய்யவேண்டும். ஆதலால் என் கடமையைத்தான் நான் செய்தேன்.

(இச்சமயம் நோட்டுக் கட்டுகள், தங்கப் பாளங்களுடன் புனிதாவும், தீனதயாளனும் ஓடி வந்து...)

புனிதா : அப்பா! அப்பா! இதோ பாருங்கள்.

(இருவரும் பூரணலிங்கத்தின் எதிரில் வைக்கிறார்கள். பூரணலிங்கம் அவைகளை ஆசையுடனும், சிரிப்புடனும் அள்ளி அணைத்துக் கொள்ளுகிறார்.)

பூரண : பொருள் கிடைத்துவிட்டது. ஆயினும் இந்த ஆபத்தான உலகில் எனக்குப் பின் என் அருமை மகளுக்குத் துணைவர் எவர்? புனிதா உன் சம்மதம் என்ன?

புனிதா : நான் அவரையே காதலிக்கிறேன்.

கருஞ் : புனிதா! எவன் உருவத்தை நீ பார்க்கவில்லையோ அவனை நீ காதலிப்பது எப்படி?

புனிதா : உண்மையாகக் காதலிக்கிறேன்.

கருஞ் : பிறகு நீ வருத்தப்பட நேரிட்டால்?

புனிதா : ஐயா, நீர் என்னை அங்கீகரிக்கிறீரா?

கருஞ் : நான் உன்மேல் மட்டற்ற காதல் உடையவன்தான்.

புனிதா : என்னுடலும்,என்னுயிரும் உடைமைகளும் தங்கள் சொத்துக்கள்.

கருஞ் : என்மீது பிறகு வருந்தாதே.

புனிதா : இம்மியுமில்லை.

கருஞ் : உன்னிடம் அன்று அடையாளமாக வாங்கிய மோதிரம் இதுதானா? பார்த்துக்கொள்.

(புனிதா சென்று மோதிரத்தையும் கையையும் கவனித்து)

புனிதா : மோதிரம் அதுதான். என்னை எரிகின்ற குடிசையிலிருந்து காப்பாற்றும்போது தங்கள் கையிற்பட்ட காயமும் இதோ இருக்கிறது.

கருஞ் : என்னைப் பார்!

(தன் முகமூடியை எடுக்கிறான். குஷ்டரோகம் நெளியும் முகம் தெரிகிறது)

புனிதா : (அதைப் பார்த்தவுடன் ஆ! ... (என்று தன் கண்களை மூடிக் கொண்டாள்.)

கருஞ் : புனிதா! நான் ஓர் அழகிய புருஷனாயிருந்தால் ...

புனிதா : அதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை.

(கண்ணீர்விடுகிறாள்.)

கருஞ் : ஆயினும் புனிதா வருந்தாதே.

(தன் முகத்தை மூடியிருந்த மற்றொரு மூடியை எடுக்கிறான். தினகரனாக நிற்கிறான்)

புனிதா : ஆ! அப்பா, தினகரா நீதானா?

தீனத : இத்தனையும் நீதானா??

(சாரங்கமும், சங்கரனும் விழிக்கிறார்கள்.)

பூரண : பரோபகார சிந்தையுள்ளவரே! எங்களைக் கண்ணை இமை காத்தது போல் காத்து வந்தவரே. என் பெண்ணை மணந்து கொள்ளுவதற்கான ஆயத்தம் செய்ய எனக்கு உத்தரவு தாருங்கள்.

சாரங்கம் : அதெப்படி? ஆபரண பொக்கிஷத்தைத் தேடித்தந்தால் தானே!

கருஞ் : சரியான ஆக்ஷேபனை.

புனிதா : பொக்கிஷத்தை உங்களால் தேடமுடியாவிட்டால், நான் வேறொருவரை மணப்பதா? முடியாது.

தினகரன் : அதை நான் தேடிப்பிடிக்க முடியாமற் போய்விடுமானால் என் உயிரை தானே மாய்த்துக்கொள்வேன். அதன்பிறகு

நீ வேறு ஒருவனை மணந்து கொள்வதால் பாதகமில்லை.

சாரங்கம்! நாம் இருவரும் விஷயத்தில் முயற்சி செய்யலாம். நீ ஜயித்தால் உனக்கு நல்ல நேரமல்லவா?

(என்று சொல்லிப் போய்விடுகிறான். புனிதா வருத்தத்தோடு அந்தக் காட்சியைக் கவனிக்கிறாள். அனைவரும் அவ்வாறே)

புனிதா : எனது வீர மணாளரா தோற்பார்?

பூரண : (மீண்டும் சோர்வுடன் படுத்துக் கொள்கிறார்) என் மகளை நான் என்றைக்கு மணக்கோலத்துடன் பார்ப்பது?

## காட்சி - 35

### சங்கரன் வீடு

(புனிதா ஒருபுறம் சோபாவில் உட்கார்ந்து தினகரனை நினைந்து. சந்தோஷமும், துக்கமும் அடைகிறாள். அவள் மனக் கண்ணில் தினகரன் உருவம் தோன்றுகிறது. புனிதா அணைக்கத் தாவுகிறாள். மறைகிறது. வருந்துகிறாள். மீண்டும் தினகரன் உருவம் தோன்றிப் புனிதாவை ஆலிங்கனம் செய்கிறது. பிறகு மறைகிறது. அச்சமயம்.

சாரங்கமும், சங்கரனும் ஒரு புறமாக வந்து புனிதா அறியாமல் மாடியில் ஏறுகிறார்கள்.

## காட்சி - 36

### சாரங்கம் வீட்டு மாடியில்

(தினகரன் கழட்டிப் போட்டிருக்கும் கரிய உடை அங்கே மாட்டப் பட்டிருக்கிறது. சாரங்கம் அதன் பையில் தடவிப் பார்க்கிறான். ஒரு குறிப்புப் புத்தகம் கிடைக்கிறது. வாசித்துப் பார்க்கிறான்.)

சாரங்கம் : இதைப்பார்! (வரிமேல் கைவைத்து வாசித்துக் காட்டுகிறான்) சிகாமணியானவன் பூமிநாதனையும், அவன் மனைவியை யும் கொலைசெய்துவிட்டு நகைப் பொக்கிஷத்தைத் தூக்கிக் கொண்டு வெளியில் ஓடிவிட்டான். லிங்கக்கிழவர் தேடிச் சென்றார். சிகா மணியை பழிக்குப்பழி வாங்க எண்ணிச் சிகாமணியைத் தேடிச் சென்றார். சிகாமணி செஞ்சிப் பாதையில் அகப்பட்டான். உடனே லிங்கக் கிழவர் அவனைக் குத்திக் கொன்றார். அந்தக் கொலைக் குற்றத் திற்குப் பயந்து லிங்கக் கிழவர் பூமிநாதனின் ஒருவயது குழந்தையாகிய புனிதாவைத் தூக்கிக் கொண்டு ஆஸ்தி ரேலியாவுக்கு வந்து சேர்ந்தார். இதைக் கொண்டு யோசித்தால் புனிதாவுக்கு எல்லா உண்மையும் தெரிந் திருக்கிறது. ஆனால் அந்த சிகாமணி என்பது என் தந்தை யின் பேர்தான் என்பதும் அவளுக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ தெரியவில்லை.

சங்கரன் : பெட்டி இன்ன இடத்தில்தான் இருக்கலாம் என்ற ரகசியம் கொஞ்சம் கூடத் தெரியவில்லையல்லவா.

சாரங்கம் : கொஞ்சங்கூடத் தெரியவில்லையே, என்ன செய்யலாம்?

சங்கரன் : தினகரன் பேசுகிற மாதிரியிலிருந்து அவன் பெட்டியைக் கண்டுபிடித்துவிடுவான் என்று எண்ணவேண்டியதிருக்கிறது. தினகரனை நாம் விடக்கூடாது. அவனைப் பின் தொடர வேண்டும். அவன் போகுமிடமெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும். அதுமாத்திரம் போதாது. புனிதாவையும் நம் வசத்தில் பத்திரப்படுத்தவேண்டும். தினகரன் ஒருக்கால் பெட்டியைக் கைப்பற்றிவிட்டால், அதை நாம் பிடுங்கிக்கொள்ள வேண்டும்.

சாரங்கம்: நிச்சயமாக அப்படித்தான் செய்யவேண்டும்.

## காட்சி - 37

### சாரங்கம் வீட்டுத் தோட்டம்.

(புனிதா தோட்டத்தில் தனியாகத் தனது காதலன் தினகரனைப் பற்றிய சிந்தனையிலிருக்கிறாள். அச்சமயம் சாரங்கம் அவளின் பின்புறமாக அவள் தோளில் கை வைக்கிறான். அவள் திடுக்கிட்டுத் திரும்புகிறாள்.)

சாரங்கம் : என்ன சிந்திக்கிறாய்?

புனிதா : சிந்தனையின்றி இருக்க யாரால் முடியும்?

சாரங்கம் : நகைப் பெட்டியைப் பற்றி உனக்குத் தெரிந்துள்ள ரகசியங்களை ஒருதலைப்பட்சமாக அந்தத் தினகரனுக்கு மாத்திரம் தெரிவித்தாயல்லவா?

புனிதா : என்ன தெரிவித்தேன்?

சாரங்கம் : உனக்கு நினைவில்லையா?

புனிதா : எனக்குத் தெரிந்தவைகளை நீரே என்னைக் கேட்காததால், அவைகள் உமக்குத் தெரிந்திருக்கும் என்று நான் நினைத்தேன்.

சாரங்கம் : அவைகள் எனக்குத் தெரிந்திருந்தால் நான் இத்தனை நாள் பெட்டியைத் தேடியிருப்பேன்.

புனிதா : இனி, சீக்கிரம் பெட்டியைத் தேடிவிடுவீர் போலிருக்கிறது.

சாரங்கம் : இன்னும் மூன்று நாட்களில்

புனிதா : ஆனால் என் பெற்றோரைக் கொலை செய்த சிகாமணி என்பவன் யார் என்பதும், உமக்குத் தெரிந்திருக்குமே!

சாரங்கம் : தெரியும்! அதைச் சொல்லத்தான் இப்போது வந்தேன். வருந்தாதே. தினகரன் தந்தைதான் உனது பெற்றோரைக் கொன்றவன்!

புனிதா : என் பெற்றோரைக் கொன்றவன் லிங்கக்கிழவரால் கொலை செய்யப்படவில்லையா?

சாரங்கம் : அதெல்லாம் சுத்தப்பொய். தீனதயாளன்தான் அந்தப் பெட்டியையும் அபகரித்தவன். ஆனால் அது அப்போது வேறொருவரால் அபகரிக்கப்பட்டு, மறைக்கப் பட்டது.

புனிதா : எந்த இடத்தில்?

சாரங்கம் : இதற்குள் அதை வெளியிடமுடியாது. ஆனால் நீ என்னை மணப்பதாக உறுதிகூறு! இல்லாவிட்டால் பெட்டியை உன்னிடம் கொடுக்கமாட்டேன்.

புனிதா : உறுதி என்ன கூறுவது?

சாரங்கம் : அடையாளமாக, என் கன்னம் சிவக்க ஒரு முத்தம்.

புனிதா : என்னை, பலாத்காரம் செய்ய உமக்கு உத்தேசமா?

சாரங்கம் : அப்படித்தான்! ஏன் செய்யலாகாது?

(என்று அவள் கையைப் பிடிக்கிறான். புனிதா தன் இடையிலிருந்த கத்தியை எடுக்கிறாள். உடனே பக்கங்களில் ஒளிந்திருந்தவர்கள் ஓடிவந்து அவள் வாயைத் துணியால் அடைத்துத் தூக்கிப் போகிறார்கள்.)

## காட்சி - 38

**செஞ்சிக் காட்டில் கற்பாறையின் பள்ளத்தாக்கில்:**

(ஆதித் திராவிடர்கள் கூட்டமாக அங்கங்கே மண்ணை வெட்டிக் கொண்டு இருக்கிறார்கள். தினகரன் பார்வை யிட்டுக் கொண்டிருக்கிறான்.)

தினகரன் : கற்பாறையின் ஓரமாகவே தோண்டுங்கள். பெட்டி ஆழத்தில் இல்லை. மேலோடுதானிருக்கும்.

## காட்சி - 39

சாரங்கம் : என்ன ரங்கு? இவ்வளவுக்கும் தினகரன் இன்ன இடத்தில் இருக்கிறான். இனனது செய்கிறான் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே உன்னால்.

ரங்கு : ஆமாமாம், நீர் வெகுசா கிழிச்சிபுட்டீர்! அதான் எங்கப் பார்த்தாலும் தேடச் சொல்லி இருக்கிறேனே.

சாரங்கம் : கோபிக்காதே. லாபகரமாக முடியும்.

சங்கரன் : மடுவெளியில் புனிதாவைப் போய்ப் பார்த்தாயா?

ரங்கு : எல்லாம் பத்திரமாகத்தான் இருக்கிறாள்.

சங்கரன் : செஞ்சிப்பக்கம் போய்ப் பார்க்கிறதுதானே.

ரங்கு : நாளைய காலையில்!

சாரங்கம் : புனிதாவைப் பயன்படுத்தி எனக்குக் காந்தர்வ விவாகம் பண்ணிக் கொள்ளச் சொன்னால் நலமாக இருக்கும். அதை மாத்திரம் செய்தால் போதும். நீ போய் வா! இன்னொன்று செய்கிறாயா? வேலை முடித்துவிட்டால்?

ரங்கு : புனிதா சொல்லுகிற வார்த்தைகள் அப்படிப்பட்ட கோபத்தைத்தான் உண்டாக்குகிறது.

(என்று சொல்லிக்கொண்டே போகிறான்)

## காட்சி - 40

### மடுவெளியில் ஓர் வீடு – முன்புறம்

ரங்கு : அடே யாராடா கொல்லைப் புறத்தில் ஒரு குழிதோண்டு. கூரான கத்தி ஒன்று கொண்டு வா.

(புனிதா இதைக் காதில் வாங்கி, விழிக்கிறாள்.)

ஆள் : சரி.

(இருவர் மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு கொல்லைப் புறம் போகிறார்கள். மற்றோர் ஆள் ஒரு நீண்ட கத்தியைக் கொண்டு வந்து ரங்குவிடம் கொடுக்கிறான். ரங்கு கத்தியை வாங்கிக் கொண்டு புனிதாவிடம் போய் அவள் எதிரில் நின்று..)

ரங்கு : நீ சாரங்கத்தை இதே நேரம் கட்டிக்கொள்ள வேண்டும். என்னா?

புனிதா : நான்தான் முடியாது என்று மறுத்துவிட்டேனே!

(ரங்கு தன் கத்தியைப் புனிதாவின் மார்புக்கு நேராக குத்துவதற்காக ஓச்சுகிறான். இதே நேரத்தில் புனிதா தனது வயிரப் பதக்கத்தைக் கழற்றி அவன் எதிரில் நீட்டுகிறாள்.)

(இதற்கிடையில் ஓர் ஆள் ஓடிவந்து ...)

ஆள் : எசமான், நிறுத்துங்கள். அப்புறம் ஆகட்டும். வெளியில் கார் சப்தம் கேட்கிறது.

ரங்கு : தினகரனா பார்.

(ஆள் வெளியில் ஓடிவிடுகிறான்.)

## காட்சி - 41

### தீனதயாளன் வீட்டுக் குறட்டில்

(சாரங்கமும், தீனதயாளனும் நின்று பேசுகிறார்கள்.)

**தீனத** : நகைப் பொக்கிஷத்தைப் பற்றி ஏதாவது முயற்சி நடைபெறு கிறதா?

**சாரங்கம்** : உங்கள் குமாரர்தான் வெற்றி அடைவார்.

(இச்சமயத்தில் ஒரு பிணத்தை ஆஸ்பத்திரியிலிருந்து தூக்கிப் போகிறார்கள்)

**சாரங்கம்** : யாரப்பா அது?

**பிணந்** : ஒரு திக்கற்ற பிணம்! ஆரோ குத்திப் போட்டுட்டாங்களாமே ஒரு பொண்ணே!

**சங்கரன்** : (அழுதுகொண்டே தீனதயாளனிடம் வந்து) புனிதாவை யாரோ குத்திக் கொன்றுவிட்டார்களாம். இறந்துவிட்டாளாம்.

**தீனத** : அடடா! என்ன வாழ்வு ஐயோ! அவளுக்காக எத்தனை பேர்! எத்தனை பிரயாசை! இந்த பரிதாபமான விஷயத்தை அந்தப் பூரணலிங்கத்திடம் சொன்னால் அவர் உயிர் போய்விடுமே!

(அனைவரும் அழுதுகொண்டே வீட்டுக்குள் போகிறார்கள்)

## காட்சி - 42

(பூரணசந்திரன் உதயம். சாரங்கம், சங்கரன், ரங்கு மற்றும் ஆட்கள் இருக்கிறார்கள். காரிலிருந்து குதித்து ஓர் ஆள் வேகமாக ஓடிவந்தான்....)

ஆள் : அந்தக் கற்பாறையின் அடியிலிருந்து நகைப் பெட்டியைத் தினகரன் கைப்பற்றி விட்டான். என் கண்ணால் பார்த்தேன். ஐயையோ, எழுந்து ஓடி வாருங்கள். (அனைவரும் இது கேட்டுப் பதை பதைப்புடன் ஓடுகிறார்கள்.)

சாரங் : ஆட்களையெல்லாம் கூப்பிடு. ஏனடா தினகரனுடன் எத்தனை ஆட்கள் இருக்கிறார்கள்?

ஆள் : உம்! 20 பேர். சேரி ஆட்கள்!

சாரங்கம் : ஆனால் கிளம்புங்கள்.

(அனைவரும் காரில் ஏறிக்கொண்டு பறக்கிறார்கள்.)

## காட்சி - 43

### புதுவைக்குச் சற்று தூரத்தில்

(தினகரன் காரும் அந்தக் காரைச் சூழ்ந்து 20 ஆட்களும் ஒரு மைதானத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள். சாரங்கம் கார் எதிரில் ஓடி வந்து வளைக்கிறது. இருபக்கத்து ஆட்களும் கைகலந்து சண்டை போடுகிறார்கள்.

இச்சமயம், சாரங்கனும், சங்கரனும் கும்பலைவிட்டு நீங்கித் தினகரன் காரைச் சோதிக்கிறார்கள். தினகரன் இல்லை. பெட்டி மாத்திரம் இருக்கிறது. இருவரில் சாரங்கம் பெட்டியைத் தூக்கி ஓட சங்கரனும் ஓடி, இருவரும் தமது காரில் ஏறிப் போக எத்தனிக்கிறார்கள். இதற்குள் சேரி ஆட்கள் பின்னோக்கி ஓட எத்தனிக்கிறார்கள். ரங்கும் தினகரன் காரில் ஏறிக்கொண்டு சாரங்கம் காரை நெருங்குகிறார்கள்.

இருகாரும் நிற்கின்றன. பெட்டியை உடைக்கிறார்கள். திறந்து பார்க்கையில் அதனுள் சுருங்கற்களும், ஒரு கடிதமும் இருக்கின்றன. ஏமாற்றம் அடைகிறார்கள். கடிதத்தை வாசிக்கிறான் சாரங்கம்)

கடிதம்:

"சாரங்கம்! சங்கரன் இருவரும் எனது கல்யாணத்தைச் சிறப்பாக நடத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்படிக்கு,
நன்றியறிதலுள்ள தினகரன்

(இதைக் கண்ட)

சங்கரன் : ரங்கு நாம் விரைவாகப் புனிதாவை நோக்கிப் போவோம்.

ரங்கு : முட்டாளே, நான்தான் புனிதாவைக் கொன்று போட்டேனே.

சாரங்கம் : அட ஆஹா!

சங்கரன் : அப்படியா? கொலைக் குற்றத்திற்கும் நாம் ஆளாக வேண்டுமா?

(ரங்கும், தினகரனும் காரில் விரைவாகப் போகிறார்கள்.)

## காட்சி - 44

(தினகரன் தன் காரை விட்டுக் குதித்துப் பெட்டியும் கையுமாய்த் தன் வீடு நோக்கி ஓடுகிறான்.)

தீனத : (ஆத்திரத்தோடு) அப்பா, ஐயோ புனிதாவைக் குத்திக் கொன்றுவிட்டார்கள். ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டு போய்ப் புதைத்தும் ஆகிவிட்டதப்பா.

தினகரன் : ஆ! ஐயோ! புனிதா! புனிதா! உனக்காக! ஐயோ உனக்காக எத்தனை பிரயாசை! பொக்கிஷத்தையாவது கண்டு களித்துப் போகலாகாதா? ஐயோ! (சோபாவில் விழுகிறான்)

தீனத : அப்பா வருந்தாதே!

தினகரன் : அப்பா அந்தப் பொக்கிஷத்தை அந்தச் சவக்குழியில், அவளோடு சேர்த்துவிட்டு வந்து விடுகிறேன்.

(ஓடுகிறான் பெட்டியுடன்)

## காட்சி - 45

### காடு:

(தினகரன் கார் இடுகாட்டில் ஒருபுறம் நிறுத்தப்பட்டது. தினகரன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு சமாதிகளில் புதிதாயிருப்பதைத் தேடுகிறான். ஒரு சமாதியைத் தோண்டுகிறான். இச்சமயம் ...)

மேகத்தினுள் முழு நிலவு மறைந்துவிடுகிறது. சவம் கிடைக்கிறது. தன் மடியில் கிடத்திக் கொண்டு உட்கார்ந்து கொள்ளுகிறான்.)

தினகரன் : புனிதா! புனிதா! (அழுது) உனக்காக எத்தனை எத்தனை அல்லல்கள் அடைந்தேன். உன் மூதாதையர்க்குப் பாண்டியன் தந்த பரிசு இதோ இருக்கிறதே. உன் கண்களால் பார்த்தாவது இறந்தாயா? சொத்துக்குக் காத்திருந்தாய். அப் பாதகர்களால் குத்தப்பட்டு இறந்தாயா? ... *

■ ■ ■

* இந் நாடகம் முற்றுப் பெறவில்லை.